விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 239 வள்ளுவர் ஆண்டு 2055 ஆடி 29 புதன்கிழமை (14.08.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




### அரச சேவையின் சகல துறைகளிலும்
## வேதனத்தைத் திருத்துவதற்கு அமைச்சரவை அங்கீகாரம்

(கொழும்பு)

அரச சேவையின் சகல துறைகளிலும் வேதனத்தைத் திருத்துவதற்காக ஜனாதிபதியினால் முன்வைக்கப்பட்ட முன்மொழிவுகளுக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

2025ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் முன்மொழிவுகளை நடைமுறைப்படுத்துவதற்கான பரிந்துரைகள் அடங்கிய அறிக்கையை சமர்ப்பிப்பதற்காக நிபுணர் குழுவொன்றை நியமிப்பதற்கு முன்னதாக அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியிருந்தது.

இதன்படி, ஜனாதிபதியின் முன்னாள் செயலாளர் உதய செனவிரத்ன தலைமையில் நியமிக்கப்பட்ட நிபுணர் குழு, அரச அதிகாரிகள் மற்றும் அரச துறையின் பிரதான தொழிற் சங்கங்களுடன் கலந்துரை 15

### சிந்துஜாவின் மரணத்துக்கு நீதி கோரி
## யாழைச் சேர்ந்த மருத்துவர் மன்னாரில் உண்ணாவிரதம்




(யாழ்ப்பாணம்)

சிந்துஜாவின் மரணத்திற்கு நீதி கோரி யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மருத்துவர் செந்தூரன் நேற்று செவ்வாய்க்கிழமை உண்ணாவிரதப் போராட்டம் ஒன்றை ஆரம்பித்துள்ளார்.

சிந்துஜாவின் மரணத்துடன் தொடர்புடைய 15

### 13ஆவது திருத்தத்தை அமுலாக்கி
# தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு
### ரெலோ, புளொட் தலைவர்களிடம் சஜித்



(கொழும்பு)

13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்தி தமிழ் மக்களின் அனைத்துப் பிரச்சினைகளையும் தீர்ப்பதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ ரெலோ, புளொட் தலைவர்களிடம் தெரிவித்துள்ளார்.

(02ஆம் பக்கம் பார்க்க)

## 24 மணி நேரத்தில் 29 முறைப்பாடுகள்

(கொழும்பு)

தேர்தல் தொடர்பில் 24 மணித்தியாலங்களில் 29 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாக தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அவற்றில் 11 முறைப்பாடுகள் மாவட்ட தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ மத்திய நிலையத்திலும் ஏனையவை தேசிய தேர்தல் முறைப்பாடுகள் முகாமைத்துவ மத்திய நிலையத்திலும் பதிவு செய்யப்பட்டுள்ளன. (ம-7)

## 36 பேர் கட்டுப்பணம் செலுத்தியுள்ளனர்

(கொழும்பு)

2024 ஜனாதிபதித் தேர்தலுக்காக இதுவரை மொத்தம் 36 வேட்பாளர்கள் கட்டுப்பணம் செலுத்தியுள்ளதாக இலங்கை தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதேவேளை, ஜனாதிபதித் தேர்தலுக்கான கட்டுப்பணத்தைச் செலுத்துவதற்கான காலம் இன்று நண்பகல் 12 மணியுடன் 15

## நல்லைக்குமரன் வெளியீடு நாளை
### மருத்துவர் சரவணபவாவுக்கு யாழ் விருது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாநகர சபையின் சைவ சமய விவகாரக் குழுவால் நல்லூர் உற்சவ காலத்தில் 15

## ஜனாதிபதி ரணிலை ஆதரித்து புதிய கூட்டணி இன்று ஆரம்பம்
### பல தரப்புகள் கைகோர்ப்பு

(கொழும்பு)'

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிக்க உள்ள பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் கட்சிகள் இணைந்து புதிய கூட்டணியொன்றை உருவாக்க உள்ளதாக அறிவித்திருந்த பின்புலத்தில் இன்று புதன்கிழமை இந்தக் கூட்டணி தொடர்பிலான அறி 15

## ரணிலுக்கு ராஜித ஆதரவு உடன்படிக்கை கைச்சாத்து

(கொழும்பு)

முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்கவுள்ளார்.

கடந்த சில நாட்களாக இது தொடர்பிலான பேச்சுக்கள் இருவருக்கும் இடையில் இடம்பெற்று வந்த நிலையிலேயே இந்தத் தீர்மானத்தை ராஜித சேனாரத்ன எடுத்துள்ளார்.

நேற்று செவ்வாய்க்கிழமை ரணில் விக்கிரமசிங்கவுக்கும் ராஜித 15

### ஆறுகால்மடத்தில்
## இளைஞன் ஒருவர் சடலமாக மீட்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் ஆறுகால் மடப் பகுதியில் உள்ள வீடொன்றில் இருந்து இளைஞன் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

அதே பகுதியி 15

## தேர்தலுக்கு அரச நிதியை பயன்படுத்தும் ரணில்
### அநுர குற்றச்சாட்டு



(கொழும்பு)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தமது தேர்தல் செயற்பாடுகளுக்காக அரச நிதி மற்றும் அரச நிறுவனங்களைப் பயன்படுத்தி 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்...

ரெலோ, புளொட் அரசியல் கட்சியுடன் சஜித் பிரேமதாஸ நேற்று சந்தித்து கலந்துரையாடினார்.

குறித்த சந்திப்பில் பாராளுமன்ற உறுப்பினர்களான த.சித்தார்த்தன், செல்வம் அடைக்கலநாதன், கோவிந்தம் கருணாகரன் மற்றும் ரெலோவின் தேசிய அமைப்பாளர் கு.சுரேன் ஆகியோர் இந்த சந்திப்பில் கலந்து கொண்டனர்.

இந்த சந்திப்பில் கருத்து வெளியிட்ட சஜித், தான் ஜனாதிபதியானதும் 13வது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தி, தமிழ் மக்களின் அனைத்து பிரச்சினைகளையும் தீர்ப்பதாக தெரிவித்தார்.

தான் இதுவரை அதிகாரத்துக்கு வரவில்லையெனவும், அதனால் ஏனையவர்களுடன் தன்னை ஒப்பீடு செய்வது சரியான அணுகுமுறையல்ல என்றும் தெரிவித்தார்.

வடக்கில் நல்லாட்சி காலத்தில் அமுல்படுத்தப்பட்ட வீட்டுத்திட்டம் பாதியில் நிற்பதால் பலர் நெருக்கடியை எதிர்கொண்டுள்ளதை அறிந்துள்ளதாகவும், தான் கடந்த ஜனாதிபதித் தேர்தலில் தோல்வியடைந்ததால் அதனை சரி செய்ய முடியவில்லையென்றும், அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் வெற்றியடைந்ததும், இந்தப் பிரச்சினையையும் தீர்ப்பதாகவும் தெரிவித்தார்.

தமிழ்ப் பொதுவேட்பாளர் தேவையற்ற விடயமென்றும், இதனால் இலங்கைத் தீவில் இனரீதியான முறுகல்கள் எழலாம் என்றும் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பு தொடர்பில் ரெலோவின் பேச்சாளர் கு.சுரேந்திரன் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

"ஜனாதிபதி வேட்பாளரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாஸவின் அழைப்பையேற்று அவரை இன்று (நேற்று) காலை 7.30 மணியளவில் எதிர்க்கட்சி அலுவலகத்தில் தமிழ் ஈழ விடுதலை இயக்கம் (ரெலோ) சார்பில் அதன் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் எம்.பி., செயலாளர் நாயகம் கோவிந்தன் கருணாகரம் எம்.பி. மற்றும் பேச்சாளர் குருசுவாமி சுரேந்திரன் ஆகியோரும், ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி (புளொட்) சார்பில் அதன் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன் எம்.பியும் சந்தித்தனர்.

மற்றைய தரப்பில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவும், ஐக்கிய மக்கள் சக்தியின் வடக்கு மாகாண பிரதம அமைப்பாளர் உமாசந்திரா பிரகாஷும் கலந்து கொண்டனர்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பு பொது வேட்பாளரைக் களமிறக்கியுள்ள நிலையிலேயே அந்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் ஐக்கிய மக்கள் சக்தியின் வேட்பாளரான சஜித் பிரேமதாஸ, தமிழ்த் தேசிய பொதுக் கட்டமைப்பின் உறுப்பினர்களைச் சந்திப்பதற்கான அழைப்பைத் தனித்தனியாக அரசியல் கட்சிகளுக்கும் பொது அமைப்புகளைச் சார்ந்த பிரதிநிதிகளுக்கும் விடுத்திருந்தார்.

இந்த அடிப்படையிலேயே மேற்குறிப்பிட்ட அரசியல் கட்சிகள் தமிழ் மக்களின் பிரச்சினை சம்பந்தமான தங்களுடைய நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தவும், சஜித் பிரேமதாஸ, தமிழ் மக்களினுடைய அரசியல் அபிலாஷைகளைத் தீர்ப்பதற்காக முன்னெடுக்கவுள்ள நடவடிக்கைகளைப் பற்றி தெரிந்துகொள்வதற்காகவுமே இந்தச் சந்திப்பில் பங்கேற்றனர்.

இந்தச் சந்திப்பில் பிரதானமாக தமிழ் மக்களினுடைய அரசியல் அபிலாஷைகளைத் தீர்க்கும் முகமான சமஷ்டி முறையான அரசியல் தீர்வு தொடர்ந்தும் எட்டப்படாமல் இருப்பதனாலேயே தமிழ்ப் பொது வேட்பாளர் என்ற முடிவு வலுப்பெற்றது என்பது தெளிவுபடுத்தப்பட்டது.

இதுவரை காலமும் தான் இந்த நாட்டின் ஜனாதிபதியாகவோ அல்லது பிரதம மந்திரியாகவோ பதவி வகிக்கக்கூடிய சந்தர்ப்பம் வழங்கப்படவில்லை என்றும், இம்முறை அந்தச் சந்தர்ப்பம் வழங்கப்படும் பட்சத்தில் நிச்சயமாக தமிழ் மக்களுடைய பிரச்சினைகளுக்குத் தான் முடிவு காண்பார் என்றும் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

ஆகவே, கடந்த கால கசப்பான நிகழ்வுகளை மனதில் வைத்துக்கொண்டு தன்னையும் அந்த வேட்பாளர்களோடு அல்லது பதவிகளைப் பெற்றுக்கொண்டவர்களோடு ஒப்பிட வேண்டாம் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

இந்நாட்டில் உள்ள அனைத்து மக்களுக்கும் ஜனாதிபதி வேட்பாளராகப் போட்டியிடுவதற்குச் சகல உரிமைகளும் இருக்கின்றன என்றும், அதைத் தான் மதிக்கின்றார் என்றும் தெரிவித்த அவர், தமிழ்ப் பொது வேட்பாளர் என்ற உங்களுடைய நிலைப்பாட்டுக்குத் தான் மதிப்பளிக்கின்றார் என்றும் கூறினார்.

ஆனாலும் தேசிய ரீதியான தேர்தலில் இன, மொழி, மத மற்றும் பிரதேச ரீதியான அடையாளத்தோடு வேட்பாளர்கள் முன்னிலைப்படுத்துவது ஒற்றுமையைச் சீர்குலைக்கலாம்.

அவரைப் பொறுத்தவரை முதல் கட்டமாக பதின்மூன்றாவது திருத்தச் சட்டத்தின் ஊடாகக் கொண்டுவரப்பட்ட மாகாண சபைக் கட்டமைப்பை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்காகத் தான் தயாராகவுள்ளேன் என்று தெரிவித்தார். அதற்காகத் தான் வெளிப்படையாகவும் பேசி வருகின்றார் என்றும், யாருக்கும் பயந்து சாக்குப்போக்குகளைச் சொல்வது இல்லை என்றும் தெரிவித்தார்.

இவ்விடயத்தில் தான் உறுதியாக இருக்கின்றார் என்றும், ஜனாதிபதியாக வெற்றி பெறும் பட்சத்தில் உடனடியாக மாகாண சபை அதிகாரப் பகிர்வை முழுமையாக நடைமுறைப்படுத்துகின்றார்.

தமிழ் மக்கள் சார்பில், காணாமல் ஆக்கப்பட்டோருக்கான நீதி, எஞ்சியுள்ள அரசியல் கைதிகளின் விடுதலை, காணி விடுவிப்பு மற்றும் அபகரிப்பைத் தடுப்பது, தமிழ் இளைஞர்கள், யுவதிகள் நீதியற்ற முறையில் கைது செய்யப்படுவது, விசாரணை என்ற போர்வையில் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்டு வரும் அச்சுறுத்தல் நடவடிக்கையை நிறுத்துதல், இந்திய மீனவர்களுடைய அத்துமீறலினால் எமது மீனவர்கள் படுகின்ற துன்பம் உட்பட பல விடயங்கள் தீர்க்கப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டன.

தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் இப்படியான பிரச்சினைகளுக்குத் தான் சிறப்புப் பணிக் குழுக்களை அமைத்து தனது நேரடி மேற்பார்வையின் கீழ் பிரச்சினைகளுக்கான தீர்வைப் பெற்றுக் கொடுப்பதாகவும் அவர் உறுதியளித்தார்.

தான் இலங்கையில் உள்ள அனைத்து இனங்களையும் அனைத்து மதங்களையும் நேசிப்பவன் என்றும், தான் ஒரு இனவாதி அல்ல என்பதையும் தமிழ் மக்கள் கருத்தில்கொள்ள வேண்டும் என்றும், ஆகவே வரும் ஜனாதிபதித் தேர்தலிலே தனக்கான ஒத்துழைப்பை நல்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)


## கொழும்பில் பயிற்சியுடன் வேலைவாய்ப்பு

டிஷ் ஆண்டெனா இணைப்பு மற்றும் கேபிள் டிவி இணைப்பு A/L அல்லது O/L படித்த இளைஞர்கள் மேற்படி பயிற்சியுடன் வேலைவாய்ப்பை பெற்றுக்கொள்ள முடியும். சாரதி அனுமதி சான்றிதழ் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

03 மாத பயிற்சிக் காலத்தில் Rs.40,000/-
(உணவு தங்குமிடம் இலவசம்.) பயிற்சியில் திறமையுடன் செயற்பட்டவர்களுக்கு உணவு தங்குமிடத்துடன் Rs.60,000/= + இதர கொடுப்பனவுகள் வழங்கப்படும். தொடர்பு கொள்ளவும்.

**0777 710 785 (KUMAR)**
**SATS-TECH ENGINEERS LANKA (PVT)LTD**

(1339)



# 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

**கடந்த 28.07.2023 அன்று வெள்ளிக்கிழமை பூர்வபக்க தசமி திதியில் சிவபதம் அடைந்த எங்கள் குடும்பத் தலைவி**

## அமரர் திருமதி நடேசு நாகரத்தினம்



பிறப்பு:- 29.08.1940 இறப்பு:- 28.07.2023

ஆண்டு ஒன்று முடிந்ததுவோ உங்கள்
அன்பு முகம் நீங்கிச் சென்று
ஆனாலும் எம் மனமோ இன்னும்
ஆறவில்லை - அம்மா
நேற்றுப் போல் இருக்குதம்மா
அழுத பொழுதுகள் காலங்கள் பல
கடந்தாலும் என்றும் எம் மனதில்
காவியமாய் இருப்பீர்கள் அம்மா.

அறிஞர் ஐயன்னா வீதி,
அம்பனை, சுன்னாகம் மேற்கு,
சுன்னாகம்.

குடும்பத்தினர்

(1697)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வைத்தியர்களே! மனிதநேயத்தை மதியுங்கள்!

# இளம் தாயின் மரணத்திற்கு நீதிகோரி மன்னாரில் போராட்டம்

(மன்னார்)

**மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு உயிரிழந்த சிந்துஜாவிற்கு நீதிகோரி நேற்று செவ்வாய்க் கிழமை காலை 9.30 மணியளவில் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலைக்கு முன் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.**





மன்னார் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் ஏற்பாடு செய்த குறித்த போராட்டத்தில் நூற்றுக்கணக்கானவர்கள் கலந்து கொண்டனர்.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கறுப்புத் துணியால் தமது வாயைக் கட்டி கையில் கறுப்புக் கொடியை ஏந்தி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் கடந்த மாதம் 28 ஆம் திகதி சிகிச்சைக்காக வருகை தந்த நிலையில் நோயாளர் விடுதியில் இருந்த வைத்தியர் மற்றும் பணியாளர்களின் அசமந்தப்போக்குக் காரணமாக உயிரிழந்த திருமதி சிந்துஜா மரியராஜின் மரணம் தொடர்பாக ஆரம்ப கட்ட விசாரணைகள் நடைபெற்று ஒரு வாரம் கடந்தபோதும் இதுவரை எதுவித நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை என குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

வைத்தியசாலையின் பொறுப்பற்ற செயற்பாட்டினால் இறந்தவருக்கு நீதி வேண்டும். இப்படி இன்னொரு கொலை நடைபெறக்கூடாது என்ற கோரிக்கையை முன்வைத்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு ஈடுபட்டனர்.

குறித்த பதாகைகளில் பணத்துக்கு மனித உயிரை விலை பேசலாமா?, அரசே இலங்கையின் மருத்துவத்துறையை மறு சீரமைப்புச் செய், உயிர் காக்கும் வைத்தியர்களே மனித நேயத்தை மதியுங்கள், மருத்துவத் துறையின் அறம் எங்கே?, சிந்துஜாவின் மரணம் இறப்பா? கொலையா?நீதி நிழலாடுகிறதா? மாபியாக்களின் கூடாரம் ஆகலாமா வைத்தியத்துறை போன்ற வசனங்கள் எழுதப்பட்டிருந்தது.

குறித்த சம்பவத்துடன் குற்றம் சாட்டப்பட்டவர்களை பாதுகாக்க நினைக்கும் மத்திய மற்றும் மாகாண சுகாதார அதிகாரிகளுக்கு போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் எதிர்ப்பைத் தெரிவித்தனர்.

எனவே உயிரிழந்த சிந்துஜாவின் மரணத்திற்கு நீதி நிலைநாட்டப்பட வேண்டும் எனவும் குறித்த மரணத்துடன் தொடர்புடைய வைத்தியர் உள்ளடங்களாக அனைவரும் பணி இடைநிறுத்தம் செய்யப்பட்டு உரிய தண்டனை வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை முன் வைத்தனர்.

குறித்த போராட்டத்தில் சிந்துஜாவின் தாய் சிந்துஜாவின் பிள்ளை ஆகியோர் கலந்து கொண்டதோடு பெண்கள் அமைப்பு, பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், மதத் தலைவர்களும் கலந்து கொண்டனர். (நி-6-285)

## மீண்டும் பெரமுனவிற்கு ஆதரவு தெரிவிக்கும் பிரேமலால்

(கொழும்பு)

இரத்தினபுரி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் பிரேமலால் ஜயசேகர மீண்டும் நாமல் ராஜபக்ஷவிற்கு ஆதரவளிக்க தீர்மானித்துள்ளார்.

அவருடன் மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் முன்னாள் மாகாணசபை உறுப்பினர்கள் மற்றும் உள்ளூராட்சி பிரதிநிதிகள் குழுவும் வரவுள்ளதாக அரசியல் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை இவர் முன்னதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கு ஆதரவளிப்பதாக தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

## தேர்தல் தொடர்பில் இதுவரை 366 முறைப்பாடுகள்

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் இதுவரை (ஜூலை மாதம் 31 ஆம் திகதி முதல் ஒகஸ்ட் மாதம் 12 ஆம் திகதி வரை ) 366 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாகத் தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அதன்படி, தேர்தல் சட்டங்களை மீறியமை தொடர்பில் தேசிய தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்திற்கு 235 முறைப்பாடுகளும், மாவட்டத் தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்திற்கு 120 முறைப்பாடுகளும் கிடைக்கப் பெற்றுள்ளன.

இதேவேளை, மாவட்ட தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்திற்கு வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் ஒரு முறைப்பாடும் ஏனைய விடயங்கள் தொடர்பில் 10 முறைப்பாடுகளும் கிடைக்கப்பெற்றுள்ளன. (நி-6)

## கட்டுப்பணம் செலுத்தினார் திலித் ஜயவீர

(கொழும்பு)

2024 ஜனாதிபதித் தேர்தலுக்கான சர்வஜன சக்தி கூட்டணியின் ஜனாதிபதி வேட்பாளராக திலித் ஜயவீரவுக்கு கட்டுப்பணம் வைப்பிலிடப்பட்டுள்ளது. திலித் ஜயவீர சார்பில் கலாநிதி ஜீ.வீரசிங்க நேற்று கட்டுப்பணத்தை செலுத்தியுள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தலைமையிலான தொழிற்சங்கத்தின் குழுவினர் இதில் கலந்து கொண்டிருந்தனர்.

ஒகஸ்ட் 4 ஆம் திகதி கொழும்பு சுகததாச உள்ளக விளையாட்டரங்கில் நடைபெற்ற கூட்டமைப்பின் மாநாட்டின் போது "சர்வஜன சக்தி" கட்சியின் செயற்குழு உறுப்பினர் எம்.பி விமல் வீரவன்ச திலித் ஜயவீரவை ஜனாதிபதி வேட்பாளராக அறிவித்தார்.

இதேவேளை ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட கட்டுப் பணம் செலுத்திய வேட்பாளர்களின் எண்ணிக்கை 33 ஆக அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

## அநுரவை சந்தித்த பாலஸ்தீன தூதுவர்



(கொழும்பு)

இலங்கைக்காக பாலஸ்தீன தூதுவர் கலாநிதி சுஹைர் சைத் தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்கவை சந்தித்துள்ளார்.

தேசிய மக்கள் சக்தியின் தலைமை அலுவலகத்தில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

பாலஸ்தீனத்தின் காசாவில் இடம்பெறும் படுகொலைகளுக்கு எதிராக குரல் எழுப்பவும் பாலஸ்தீனத்துக்கு ஆதரவளிக்கவும் அநுரகுமாரவினால் வழங்கப்பட்ட ஒத்துழைப்புக்கு இதன்போது அவர் நன்றி தெரிவித்துள்ளார்.

இதனிடையே ஆசிய அபிவிருத்தி வங்கியின் இலங்கைக்கான பிரதிநிதி டகாபூம் கடோனா உள்ளிட்ட பிரதிநிதிகள் சிலரும் அநுரகுமார திஸாநாயக்கவைச் சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் ஊடாக இலங்கையில் முன்னெடுத்துச் செல்லப்படும் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் தொடர்பில் ஆய்வுகளை மேற்கொண்ட அவர்கள் எதிர்காலத்தில் இலங்கைக்கு நிதியுதவி வழங்கவும் தாம் தாயாராகவுள்ளதாக இதன்போது தெரிவித்துள்ளனர்.(நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுச் செய்திகள்

## மே.இ தீவுகள் - தென்னாபிரிக்கா முதலாவது டெஸ்ட் சமநிலையானது




மேற்கிந்திய தீவுகள் தென்னாபிரிக்கா அணிகள் மோதிய முதல் டெஸ்ட் "டிரா" ஆனது. மேற்கிந்தியத் தீவுகள் சென்றுள்ள தென்னாபிரிக்க அணி, இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்கிறது. முதல் டெஸ்ட் போர்ட் ஆப் ஸ்பெயினில் நடந்தது. முதல் இன்னிங்சில் தென்னாபிரிக்கா 357, மேற்கிந்தியத் தீவுகள் 233 ரன்கள் எடுத்தன.

நான்காம் நாள் முடிவில் தென் ஆபிரிக்க அணி 2ஆவது இன் னிங்சில் 30/0 ரன் எடுத்திருந்தது. ஐந்தாம் நாள் ஆட்டத்தில் தென்னாபிரிக்க அணிக்கு டோனி டி ஜோர்ஜி (45), மார்க்ரம் (38) கைகொடுத்தனர். டிரிஸ்டன் ஸ்டப்ஸ் (68) அரைசதம் விளாசினார். தென்னா பிரிக்க அணி 2ஆவது இன்னிங்சில் 173/3 ரன் எடுத்து "டிக்ளேர்" செய்தது.

கப்டன் பவுமா (15) அவுட்டாகாமல் இருந்தார். பின் 298 ரன் எடுத்தால் வெற்றி என்ற கடின இலக்குடன் களமிறங்கிய மேற்கிந்தியத் தீவுகள் அணி 11/1 ரன் எடுத்திருந்த போது ஆட்டம் மழையால் சிறிது நேரம் பாதிக்கப்பட்டது. கீசி கார்டி (31) ஆறுதல் தந்தார். அலிக் அதானஸ் 92 ரன் விளாசினார். ஆட்ட நேர முடிவில் மேற்கிந்திய தீவுகள் அணி 2ஆவது இன்னிங்சில் 201/5 ரன் எடுத்திருந்தது. ஹோல்டர் (31), ஜோசுவா (2) அவுட்டாகாமல் இருந்த னர். தென்னாபிரிக்கா சார்பில் கேஷவ் மஹாராஜ் விக்கெட் சாய்த் தார்.

இதனையடுத்த போட்டி "டிரா" என அறிவிக்கப்பட்டது. இரு இன்னிங்சிலும் சேர்த்து 8 விக்கெட் (4+4) சாய்த்த கேஷவ் மஹாராஜ், ஆட்ட நாயகன் விருது வென்றார். இரண் டாவது டெஸ்ட் நாளை கயானாவில் நடைபெறவுள்ளது. (நி-6)

## ஸ்டோக்ஸ் காயத்தால் அவதி டெஸ்டில் விளையாடுவது சந்தேகம்



இலங்கை மற்றும் இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான டெஸ்ட் தொடர் எதிர்வரும் 21 ஆம் திகதி தொடங்கவுள்ள நிலையில் இதற்காக இரு அணிகளும் தயாராகி வருகின்றன.

இந்த நிலையில் இங்கிலாந்து அணி இரசிகர்களைக் கவலை அடையச் செய்யும் செய்தி வெளியாகி உள்ளது. இங்கிலாந்து அணித் தலைவர் பென் ஸ்டோக்ஸ் தொடரில் விளையாடிய போது காயமடைந்துள்ளார்.

தொடை தசையில் காயம் ஏற்பட்டுள்ளதாகவும் அவர் ஊன்று கோலுடன் தோன்றும் புகைப்படமும் வலைத்தளத்தில் வெளியாகியுள்ளது. காயத் தின் அளவை உறுதிப்படுத்த பாதிக்கப்பட்ட பகுதியில் ஸ்டோக்ஸ் ஸ்கேன் செய்ய உள்ளார். இதன் காரணமாக இலங்கைக்கு எதிரான 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் அவர் விளையாடுவாரா என்ற சந்தேகம் எழுந்துள்ளது. (நி-6)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3195

### அனோயா


மனைவி: தூங்கும் போது என் வாய்க்குள்ள ஈ போயிடுச்சுங்க...



கனவன்: தூங்கும் போதாவது உன் வாயை கொஞ்சம் மூடக்கூடாதா...

### விதுரன்


ஆண்பாலாக பிறந்ததற்கு பதிலாக



ஆவின்பாலாக பிறந்திருந்தால் மனைவிக்கு முன் தைரியமாக பொங்கி இருக்கலாம்...

### கஜானன்

சிரித்தால் பதிலுக்கு சிரிக்கும் காலம் போய்...



இவன் ஏன் நம்மள பார்த்து சிரிக்கிறான்? என்ற சந்தேகப் பார்வை பார்க்கும் காலத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்...!

### பிரசாந்தன்

நான் எப்போலாம் கஷ்டமா பீல் பன்னுறேனோ அப்போ எல்லாம் என் நண்பனுக்கு ஃபோன் பன்னுவேன்... ஏன் உன் நண்பன், ஆறுதல் சொல்வானா...?



ச்சே ச்சே. அவன் கஷ்டத்தை சொல்வான்... அதை கேட்டு என் மனசு ஆறுதல் அடையும்...

### சிந்துயா


மனைவி: என் பிறந்த நாளுக்கு என்ன பரிசு தரப்போறீங்க?
கணவன்: என்ன வேணும் சொல்லு?
மனைவி: ஒரு ரிங் கொடுங்க போதும்



கணவன்: லேண்ட் லைனிலிருந்தா? மொபைலிலிருந்தா? டார்லிங்...

### ராகவி

மனைவி: என்னங்க... நான் வைத்து கொடுக்குற குழம்புல கறிக் குழம்பு பிடிக்குமா...? அல்லது மீன் குழம்பு பிடிக்குமாங்க..?



கணவன்: நீ வைக்கிற குழம்புக்கு பேருவைக்கிறதுதான் எனக்கு ரொம்பப் பிடிக்கும்

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampuri எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர் உற்சவகால தெய்வீக இசையரங்கு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் முருகன் உற்சவ காலத்தை முன்னிட்டு இளங் கலைஞர் மன்றம் மற்றும் தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் இணை அனுசரணையுடன் நடத்தும் தெய்வீக இசையரங்கு இன்று புதன்கிழமை நல்லூர் துர்க் காதேவி மணி மண்டபத்தில் இடம்பெறும்.

மாலை 6.45-7.10 மணி வரை இடம்பெறவுள்ள இசை யரங்கு நிகழ்வில் பாட்டு- ஸ்ரீ.ஸ்ரீநகரி, கே. அஷ்விகா, வயலின் தா. சுமனசர்மா, மிரு தங்கம்- சோ. சங்கர்ஷணன் ஆகியோர் கலந்துகொள்ள வுள்ளனர்.

அதனைத் தொடர்ந்து 7.15-8.05 மணிவரை இடம்பெற வுள்ள இசையரங்கு நிகழ்வில் பாட்டு-சின்னையா சூரியகுமார், வயலின் -செ.ஜனனி, மிருதங் கம்- ம.லோகேந் திரன், கடம்- சே. சிவஜெனன், தபேலா-ந. கேதாரநாத் ஆகியோர் நிகழ்த் தவுள்ளனர். (நி-6)

# மஹாகும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் கந்தரோடை ஆலடி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் தேவஸ்தான மஹாகும்பா பிஷேகம் எதிர்வரும் 19ஆம் திகதி திங்கட்கிழமை இடம் பெறவுள்ளது. இந்நிலையில் எதிர்வரும் 18 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 6மணி தொடக்கம் மாலை 4 மணி வரை எண்ணெய்க் காப்புச் சாத்தும் நிகழ்வு இடம் பெற்று மறுதினம் திங்கட் கிழமை காலை 5.30 - 7 மணிவரை உள்ள சுப முகூர்த்த வேளையில் மஹா கும்பா பிஷேகம் நடைபெறவுள்ளது என ஆலய பரிபாலன சபை யினர் அறிவித்துள்ள னர். (நி-6)


ENGLISH CLASSES

(For group of Minimum Five Members)

- English Language......Gr9. Gr10. Gr11 and GCE A/L
- English Literature......Gr10. Gr11 and GCE A/L
- English Language and Literature ........ For Degree and Diploma Classes
- IELTS............ Preparation Classes
- TOFEL............ Preparation Classes
- Spoken English Classes
- Business Communication................ Public and Private Sector Employees

(English for Employees of Public and Private Sector)


**Starts on 18.08.2024**

**Note: School Students Should come with parents for enrollment**

(பாடசாலை மாணவர்கள் பதிவிற்கு பெற்றோருடன் வருகை தரல் வேண்டும்)

**Teacher: Mr.K. Subramaniam**
**(Retd.ADE-English)**

158, POTPATHY ROAD, KONDAVIL.
TP-077 351 8308, 071 812 5937. (1685)

# வெடிபொருட்கள் அடையாளம்

(தருமபுரம்)

தருமபுர பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட கல்லாறு வண் ணாத்தி ஆறு பகுதியில் மூன்று வெடி பொருட்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

மக்களால் இனங்காணப்பட் டதையடுத்து தருமபுர பொலி ஸாருக்கு தகவல் தெரிவிக் கப்பட்டதிற்கு அமைவாக நீதி மன்ற அனுமதியுடன் சிறப்பு அதிரடிப் படையினரால் நேற்று குறித்த வெடிபொருட்களை செய லிழக்க வைப்பதற்கான நட வடிக்கையை முன்னெடுத்தி ருந்திருந்தனர். (நி-6-316)

# இஞ்சி இறக்குமதிக்கு அனுமதி

(கொழும்பு)

இஞ்சியை இறக்குமதி செய்ய அமைச்சரவை அனு மதியளித்துள்ளது.

எதிர்வரும் மூன்று மாதங் களில் 3,000 மெற்றிக் தொன் இஞ்சியை இறக்குமதி செய் வதற்கு அமைச்சரவை அனு மதி வழங்கியுள்ளதாக அமைச் சரவைப் பேச்சாளர் தெரிவித் துள்ளார். (நி-6)




## நல்லைக் கந்தவேளே!


பொற்பாதந் தன்னையே போற்றுகின் றோமுனது
பொன்னருள் பூக்கவேண்டும்
கற்பனைக் கெட்டாத நற்பதந் தன்னையே
காணவெமை நோக்கவேண்டும்
சொற்பதத் தாற்கவிதை சூட்டவே யொளிவீசிச்
சொல்லுதமிழ் வெல்லவேண்டும்
நாற்பரா தற்பரா பற்றேது மற்றவா
நனிநல்லைக் கந்தவேளே!

**கலாபூஷணம், சந்தக்கவிஞர்**
**நவ.பாலகோபால்.**

## நல்லையின் நாயகன்

நல்லூர்ப் புரம் கண்டெடுத்த நாயகன்
நல்லாட்சி புரிந்து வரும் மன்னவன்
நல்லையம்பதி எழுந்தருளிய 3 ஆம் வேலவன்
நல்லூரை என்றும் காத்திடும் காவலன்
நற்கவிதை புனைகின்ற புலவர்களின் பாவலன்
நல்லூர் அடியார் அவர் தம் காதலன்
நல்லையில் வாழ்கின்ற என் குருவானவன்
அலங்காரக்கந்தனாய் அனுதினமும் எனை ஆள்பவன்

**லிங்கேஸ்வரன் ஜனார்த்தன்,**
**மறவன்புலோ.**



# இராசிபலன்

**14.08.2024**
**ஆடி 29, புதன்கிழமை**
**நவமி காலை 6.52 மணிவரை.**

**அனுசம் முற்கல் 9.45மணிவரை**
**சுபநேரம் 4.35-6.05 மணிவரை**
**இராகுகாலம் -12.05-1.35 மணிவரை**

**சந்திராஷ்டமம்.**
**அச்சுவினி.**

**வளவன்**




கொடுக்கல் வாங்கல்களில் கவனம் தேவை, உடல் நலனில் கவனம் தேவை, விரயங்கள் மேலோங்கும், கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள்.




குடும்பத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், நம்பிவந்தவர்களுக்கு கைகொடுத்து உதவுவீர்கள்.




நன்மைகள் நடைபெறும் நாள், வருமானம் பெருக வழியமைத்துக் கொள்வீர்கள், கனவு பலிதமுண்டு, பிறர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.




புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், மற்வர்கள் நலன் கருதி எடுத்த முயற்சிகள் வெற்றி தரும், சுப செய்திகள் வந்து சேரலாம்.




உறவினர்கள் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, சுபசெய்திகள் வந்து சேரலாம், வியாபார விருத்திக்கு வித்திடுவீர்கள், தொலைபேசி வழியில் சுப செய்திகள் வந்து சேரலாம்




உயர்வான சிந்தனைகள் மனதில் குடிகொள்ளும், செல்வநிலை உயரும் நாள், வழிபாடு முன்னேற்றம் தரும், போசன சுகமுண்டு செய்தொழில் மேன்மையுண்டு.




பொதுவாழ்வில் பெரிய மனிதர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், தொழில் வளர்ச்சி அதிகரிக்கும், பணப் புளக்கம் அதிகரிக்கும் நாள்.




உறவினர் பகை அகலும், அன்பாகவும் பக்குவமாகப் பேசி காரியங்களைச் சாதித்துக் கொள்வீர்கள், ஆன்மிக சிந்தனை மேலோங்கும் நாள், கற்பனை மிகுதியான நாள்.




பயணத்தில் பிரியமான ஒருவரை சந்திக்கும் வாய்ப்புண்டு, சுப விரயங்கள் மேலோங்கும் நாள், மறைக்க முடியாத சம்பவம் ஒன்று இடம் பெறும் வாய்ப்புண்டு.




முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், பலரது அன்பிற்குப் பாத்திரமாவீர்கள், வியக்கும் செய்திகள் வந்து சேரலாம்.




செய் தொழிலில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், திட்டமிட்ட காரியங்கள் எளிதில் கைகூடும்.




தடைகள் விலகி தன வரவு கிடைக்கும் நாள், எதிர்காலம் குறித்து முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள், எதிர்பார்ப்புகள் நிறைவேறும் நாள், பயணங்களால் பலனுண்டு.

**இக்காலத்தில் திருடர்கள் மட்டும் அல்லை காரியாலயத்தில் இருக்கின்றார்கள்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# களக்கற்கையும் தொண்டைமானாறு வெளிக்கள நிலையமும்

ஞானமணி
இரட்ணசிங்கம்
ஆசிரிய கல்வியியலாளர்

03



அதனையும் மீறி "முதல் தடவையாக நேரடியாகக் கடலைக் காண்கின்றோம். **ஒரு தடைவை காலையாவது நனைக்க விடுங்கள் சேர்"** என்கின்ற கெஞ்சுதல்களுக்கு இறுதியில் சந்தர்ப்பம் தரப்படும் என்கின்ற விடை சலிப்பைத் தருகின்றது போலும். குழு வேலையை பதினைந்து நிமிடத்தில் முடித்து விட்டு கற்றலுக்குத் தாயாராகின்றார்கள்.

வெட்ட வெளியில் வட்டமாக அமர்ந்து ரம்மியமான மாலை வேளையில் அதுவும் கடற்கரையில் அமர்நதிருந்து கற்றலில் ஈடுபடும் சந்தர்ப்பம் பெருமளவான பிள்ளைகளுக்கு இதுவே முதல் தடைவை என்பது அவர்களது ஆர்வம் மற்றும் முகபாவனை என்பவற்றில் இருந்து கண்டறியக் கூடியதாக இருக்கின்றது.

**கற்றற் சூழலை**( Learning Environment) அடிக்கடி மாற்றுவதால் கற்பித்தல் இலகுவாகும் என்பதின் உண்மையை விரிவுரையாளர்கள் மீண்டும் ஒரு முறை உணர்ந்து கொள்கின்றார்கள்.

தாம் தேடிய விபரங்களை முன் வைப்பதிலும் அதற்கான சகபாடிகளினதும் விரிவுரையாளர்களினதும் மற்றும் அங்கு பார்வையாளர்களாக இருந்த கிராமவாசிகளாலும் ஒழுங்குபடுத்தப்பட்டு முழுமையாக்கப்படுகின்ற கலந்துரையாடல்களில் பிள்ளைகள் தம்மை மறந்து இணைகின்றனர்.

அவர்களின் வயதுக்குரிய **ஆராய்வூகளின்** பால் எழும் வினாக்கள் முழுமைக்குமே தமக்குத் திருப்தி தரும் விடைகளைப் பெறாத மாணவர்களின் முகங்களில் அவர்களின் உள்ளத்தில் பதிந்த தேடுதல் எனும் அலை உருவாக்கப்பட்டுவிட்டதனை அறிந்து கொண்ட விரிவுரையாளர்,

"ஆம். பிள்ளைகள். இது கற்றலின் ஆரம்பமேஒழிய முடிவல்ல. இனி உயர்தர வகுப்புகளில் உங்களின் மனக் கேள்விகளுக்கு விடை கிடைக்கக் கூடும். அதனை விடவும் உங்களின் ஆராய்ச்சி களுக்கு உரிய தலைப்புகளை இனித் தேடி அலையத் தேவையில்லை" என்ற வாக்கியம் எல்லாவற்றிற்கும் முத்தாய்ப்பாக அமைந்தது.

அவர்களின் வேண்டுதல் களின் படி பொறுப் பாசிரியர்களின் துணையுடன் சிறு சிறு குழுக்களாக இறுதி பத்து நிமிடங்கள் காலைமட்டும் கடலலை தழுவவும் நிஜங்களை நிழற்பிரதிகளாக்கவும் மிகந்த கவனிப்புடன் சந்தர்ப்பம் வழங்கப் படுகின்றது.

**களக்கற்கையும் தொண்டைமானாறு வெளிக்களநிலையமும்.**



அதுவரை இவர்களுடன் இணைந்து ரசித்துக் கொண்டிருந்த கடற்கரைப்பகுதிக்கு பொறுப்பான பிரதேசசபை உறுப்பினர் வந்து, மாஸ்டர் இதிலை இவ்வளவு பாட விடயம் இருக்குதெண்டு எங்களுக்கும் இப்பதான் தெரியுது. இனி அடுத்த பாடசாலை எது சேர்? எப்ப வருவினம்?" என்கின்ற வினாக்களூடாக தமது மகிழ்ச்சியையும் ஆதரவினையும் பகிர்ந்து கொள்கின்றனர்.

"முதலில் பாடசாலைகள் விண்ணப்பிக்க வேண்டும். அந்த நாட்களில் இங்கே இடம் கிடைத்த நாட்களுக்கு அனுமதி வழங்கப் படும். கல்விப் பொதுச் சாதாரண (O/L) தரம் மாணவர்களின் பயிலமர்வில் (workshop) தான் இந்த அக்கரைச் சூழல் கற்கை இணைக்கப்பட்டுள்ளது. அப்படியான நாட்களில் தான் நாம் இங்கே வருகின்றோம்." இது பிரதேச சபை உறுப்பினரின் கேள்விக்கான பதில்.

'ஆனால் பிள்ளைகள் வாராந்தம் வருகின்றார்கள் போலிருக்கின்றதே. போன முறை கிளிநொச்சிப் பாடசாலையொன்று பேர் சொல்லிச்சினம்."

"ஆம். இந்த வருடம் கொஞ்சம் அதிகம் தான்."

"இவர்கள் எந்த இடத்திலிருந்து வந்திருக்கின்றார்கள்."

"புத்தளம். ஆண்டிமுனைத் தமிழ் மகாவித்தியாலயத்துடன் இணைந்து இன்னொரு பாடசாலை மாணவர்கள் வந்துள்ளனர்"

"அங்கே இருந்து இங்க வருவதற்கு போக்குவரத்திற்கே அதிக செலவாகுமே." ஆம்! கிட்டத்தட்ட ஒரு லட்சம் வரை வரும். அந்தச் செலவிற்கான அனுசரணையை IMHO எனப்படும் சர்வதேச மருத்துவ சுகாதார நிறுவனம் வழங்குகின்றது.

"பொம்பிளைப் பிள்ளைகளும் வந்திருக்கினம். தங்குமிடவசதிகள் எப்பிடி சேர்."ஓர் குடும்பத் தலைவனுக்குரிய ஆதங்கத்துடன் வந்தது கேள்வி.

"முதலாம் மாடி தனிய 50 பேர் வரை தங்கும் வசதியுடன் உள்ளது. இது ஆண்களுக்குரியது. பொறுப் பாசிரியர் மற்றும் பெற்றோர் அவர்களுடன் தங்குவார்கள்.இதே போல் பெண்களுக்கு தனியே உள்ளது."

நல்லது மாஸ்டர். சந்தோசம் இருள்கின்றது.. பிள்ளைகளைப் பாருங்கள்."

"சரி அண்ணை நாம் மீண்டும் அடுத்த பாடசாலைப் பிள்ளைகளுடன் சந்திப்போம். பிள்ளைகள் அனைவரும் இரண்டு வரிசைகளில் வெளிக்கள நிலையம் நோக்கி நடவுங்கள். பொறுப்பாசிரியர்கள் வழிப்படுத்துங்கள். நாம் மீண்டும் ஒரு மணித்தியாலத்தின் பின் பல்லூடக அறையில் சந்திப்போம். சீருடை தேவையில்லை. சாதாரண உடையுடன் வரலாம்."

மாணவர்கள் பெருமூச்சொன்றுடன் மீண்டும் வெளிக்கள நிலையம் நோக்கி நடையைக் கட்டுகின்றனர்.

"சேர் இங்கே எந்தெந்த வகுப்புகளுக்கான செயன்முறைப் பட்டறை நடைபெறுகின்றது" இது எம்முடன் கூடப் பயணித்த அதிபரின் கேள்வி.

"உயர்தர வகுப்புகளிற்கான நான்கு நாள் வேலைத்திட்டம். பௌதிகவியல், இரசாயனவியல், கணிதம் மற்றும் உயிரியல் பாடங்களுக்குரியன."

"ஓகே." மற்றது இப்ப நீங்கள் வந்தது மாதிரி தரம் பதினொன்றாம் வகுப்பிற்குரியது. இது இரண்டு நாட்கள் மட்டும் நடைபெறும். சில பாடசாலைகள் ஒரு நாள் மட்டும் வருகை தரும்"

"ஒரு நாள் என்றால் எப்படி"

"பௌதிக பகுதிகளுக்கு மட்டும் சில பாடசாலைகள் வருவதுண்டு. பொதுவாக அண்மைப் பாடசாலைகள் இதனை விரும்பு வர்."

"அப்ப அவர்களுக்கு இரசாயனவியல், உயிரியல் பகுதிச் செயற்பாடுகள் நடைபெறுவதில்லை. அப்படியா?"

"ஓம் சேர் எல்லாவற்றையும் ஒன்றாகப் படிப்பிக்க முடியாது. அப்படி என்றால் பிள்ளைகளுக்கு படிப்பில் வெறுப்பு வந்து விடும்"

" அது சரி நானும் பார்க்கிறேன். இன்று முழுவதும் பிள்ளைகள் உங்களுடன் சலிப்பின்றி நிற்பதற்காக நீங்கள் கையாளுகின்ற உக்திகளை எங்கள் ஆசிரியர்களும் பார்த்துக் கொண்டு நின்றவர்கள் தானே. இனி அவர்களும் புத்தாக்கங்களில் ஈடுபடுவார்கள் என நம்புகின்றேன்."

'எங்களின் எதிர்பார்ப்புகளில் ஒன்று தானாகவே நிறைவேறுகின்றது.'

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உரிமை கோரப்படாத சடலம்

(யாழ்ப்பாணம்)

கடந்த 19.11.2022 அன்று சுயநினைவற்ற நிலையில் விடுதி 34 இல் அனுமதிக்கப்பட்டு 22.11.2022 அன்று இறந்த பெண்ணின் சடலம் இதுவரை அடையாளம் காணப்படவில்லை.

இந்நிலையில் குறித்த சடலத்தினை சட்ட ரீதியாக அரச செலவில் அடக்கம் செய்வதற்கு சடலத்தினை அடையாளம் காட்டக் கூடியவர்கள் 14 தினங்களுக்குள் யாழ். போதனா வைத்தியசாலை பணிப்பாளர் அலுவலகத்தினை தொடர்பு கொள்ளுமாறு போதனா வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (நி-6)




# அபிவிருத்தி வேலைத்திட்டங்களை ஆராய்ந்த அங்கஜன் இராமநாதன்

(சாவகச்சேரி)

தென்மராட்சிப் பிரதேசத்தில் மக்களால் பரிந்துரைக்கப்பட்ட அபிவிருத்தித் திட்ட முன்மொழிவுகள் தொடர்பாக யாழ் மற்றும் கிளிநொச்சி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் பாராளுமன்றக் குழுக்களின் பிரதித் தவிசாளருமான அங்கஜன் இராமநாதன் நேற்று செவ்வாய்க் கிழமை கண்காணிப்பு விஜயம் ஒன்றினை மேற்கொண்டிருந்தார்.

இதன்போது தென்மராட்சியில் அபிவிருத்தித் திட்டங்களுக்காக மக்களால் பரிந்துரைக்கப்பட்ட சனசமூக நிலையங்கள், முன்பள்ளிகள், பொது நோக்கு மண்டபங்கள், பாடசாலைகள் மற்றும் மைதானங்கள் உள்ளிட்ட 36 பொது இடங்களுக்கு கண்காணிப்பு விஜயத்தை மேற்கொண்டிருந்தார்.

அத்துடன் மேற்படி பொது அமைப்புக்களுடைய மேலதிக தேவைப்பாடுகள் குறித்தும் பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் கேட்டறிந்ததுடன் அவசர தேவைப்பாடுகள் மற்றும் பிரச்சினைகளை உடனடியாகத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகளையும் உரிய திணைக்களங்கள் ஊடாக முன்னெடுத்திருந்தார். (நி-6-30)

# தேர்தல் தொடர்பிலான முன்னாயத்த நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தல்களுக்கு குழுக் கடமைகளுக்காக நியமிக்கப்பட்ட உதவித் தெரிவாட்சி அலுவலர்களுடனான முன்னாயத்தக் கலந்துரையாடலானது யாழ். மாவட்டபதில் அரசாங்க அதிபரும், தெரிவாட்சி அலுவலருமான ம.பிரதீபன் தலைமையில் நேற்று முன்தினம் மாவட்டச் செயலக அரச அதிபர் அலுவலகத்தில் நடைபெற்றது.

இக் கலந்துரையாடலில் ஜனாதிபதி தேர்தல்கள் தொடர்பாக குழுக்களின் கடமைகள் மற்றும் பொறுப்புகள் தொடர்பாக விளக்கமளிக்கப்பட்டு ஆராயப்பட்டன.

இக் கலந்துரையாடலில் மேலதிக அரசாங்க அதிபர் (காணி) க.ஸ்ரீமோகனன், உதவித் தேர்தல் ஆணையாளர் இ.கி.அமல்ராஜ், உதவி மாவட்டச் செயலாளர், பிரதம கணக்காளர், திட்டமிடல் பணிப்பாளர் உள்ளடங்கலாக உதவித் தெரிவாட்சி அலுவலர்களாக நியமிக்கப்பட்ட பதவிநிலை உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டார்கள். (நி-6-33)

# கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையில்
சைவ சமயபாட ஆசிரியராக கடமையாற்றிய
அமரர்.
**சுந்தரலிங்கம் பன்னீர்ச்செல்வன்**



பொன்மலர்ந்த முகமும் புன்சிரிப்பும்
கொண்டவரே
மீளாத்துயில் கொண்டு ஆறாத்துயரில்
ஆழ்த்திச் சென்றீரே
கலையாத நினைவுகளுடன் உதிரும்
கண்ணீர் கொண்டு
அர்ச்சித்து உங்கள் ஆத்மா சாந்தியடைய
எம் கண்ணீர்த்துளிகளை
காணிக்கையாக்குகின்றோம்.

மலர்வு 1973.09.07 உதிர்வு 2024.08.12


துயர்பகிர்வோர்-
பாடசாலைச் சமூகம்,
யா/நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலை. (சி-973)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரதம்

# சிரியாவில் சக்தி வாய்ந்த நிலநடுக்கம்



(டமாஸ்கஸ்)

சிரியாவில் சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஒன்று ஏற்பட்டுள்ளதாகச் சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

ஹமா என்ற நகரில் இருந்து கிழக்கே 28 கிலோமீற்றர் தொலைவில் உள்ளூர் நேரப்படி நேற்று முன்தினம் இரவு 11:56 மணியளவில் நிலநடுக்கம் ஏற்பட்டதாக கூறப்படுகிறது.

இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவில் 5.5 ஆக பதிவாகி உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இது 3.9 கிலோமீற்றர் ஆழத்தில் ஏற்பட்டதாக சிரியா நாட்டின் தேசிய நிலநடுக்க மையம் தெரிவித்துள்ளது.

ஹமா மட்டுமின்றி சிரியாவின் பல மாகாணங்களில் இந்த நிலநடுக்கம் உணரப்பட்டது.

இந்த நிலநடுக்கம் ஏற்படுவதற்கு சில மணி நேரங்களுக்கு முன்பு தான் 3.7 ரிக்டர் அளவில் லேசான நில அதிர்வு ஏற்பட்டது.

நிலநடுக்கத்தால் ஏற்பட்ட பாதிப்புகள் குறித்த தகவல் ஏதும் வெளியாகவில்லை.

எனினும், சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்படுவதற்கான முன்னோடியாக இது இருக்கலாம் என்றும், மக்கள் எச்சரிக்கையுடன் இருக்குமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

கடந்த 2023 ஆம் ஆண்டு துருக்கி மற்றும் சிரியாவில் ஏற்பட்ட சக்தி வாய்ந்த நிலநடுக்கத்தில் சிக்கி சுமார் 50 ஆயிரத்திற்கும் அதிகமானோர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

# இஸ்ரேல்- மத்தியகிழ

# தீவிரமடையும் போ

## விளைவுகள் பயங்கரமாக இருக்கும்!

### ❖ எச்சரித்த மேற்கு நாடுகள்

ஈரானில் வைத்து ஹமாஸ் தலைவர் இஸ்மாயில் ஹனியே கொல்லப்பட்ட சம்பவம் இஸ்ரேலுக்கும் மத்திய கிழக்கு நாடுகளுக்கும் இடையில் போர்ப்பதற்றத்தை மேலும் தீவிரப்படுத்தியுள்ளது. லெபனானின் ஹிஸ்புல்லா அமைப்பு. ஏமன் நாட்டில் இயங்கி வரும் ஹவுதி கிளர்ச்சியாளர்கள் என இஸ்ரேலின் பாலஸ்தீன தாக்குதலுக்குப் பதிலடி கொடுத்து வருகின்றனர்.

இந்த நிலையில் ஈரானின் புதிய ஜனாதிபதியாக தேர்வான சீர்திருத்தக் கட்சியைச் சேர்ந்த மசூத் பெசஸ்க்கியானின் பதவியேற்பு நிகழ்ச்சிக்காக ஈரான் வந்த இஸ்மாயில் ஹனியே அவரது வீட்டில் வைத்து கொல்லப்பட்டார். இதற்கு இஸ்ரேல்தான் காரணம் என்று ஈரான் குற்றம்சாட்டியது. இதனால் இஸ்ரேல் மீது ஈரான் எந்த நேரமும் தாக்குதல் நடத்தக்கூடும் என்று தெரிகிறது. நேரடித் தாக்குதலுக்கு ஜனாதிபதி மசூத் மற்றும் ஈரான் புரட்சிகர படையினர் இடையில் கருத்து வேறுபாடு இருந்தாலும், இஸ்

**(டெஹ்ரான்)**

**இஸ்ரேல் மீது ஈரான் முன்னெடுத்**
**கடுமையான விளைவுகளை ஏற்படு**
**பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக அமை**
**ஜேர்மனி, இத்தாலி, பிரிட்டன் ஆகி**
**ஈரானை எச்சரித்துள்ளன.**

ே
ஈ

## பற்றி எரிந்த அணுமின் நிலையம்
## ரஷ்யாவுக்குள் நுழைந்த உக்ரைன் படைகள்

### தீவிரமாகும் போர்



(மொஸ்கோ)

ஐரோப்பிய யூனியன் மற்றும் அமெரிக்கா அங்கம் வகிக்கும் நேட்டோ கூட்டமைப்பில் இணைய முயன்ற உக்ரைன் நாட்டின் மீது ரஷ்யா தொடுத்த போர் கடந்த 2 ஆண்டுகளுக்கு மேலாக நீடித்து வருகிறது. இராணுவ பலம் கொண்ட ரஷ்யாவின் தாக்குதலை சமாளிக்க மேற்கத்தேய நாடுகள் உக்ரைனுக்கு ஆயுத மற்றும் பொருளாதார உதவிகள் செய்து வருகின்றன. எனினும் இந்தப் போரில் ரஷ்யாவின் கைகள் ஓங்கி இருக்கிறது.

உக்ரைன் தலைநகர் கீவ் வரை ரஷ்ய படைகள் தாக்குதலை முன்னெடுத்தனர். மேற்குலகின் பொருளாதார தடைகளை மீறி இந்தப் போரில் ரஷ்யா அதி தீவிரமாக ஈடுபட்டுள்ளது. மறுபுறம் உக்ரைன் ஜனாதிபதி விளாடிமிர் ஜெலென்ஸ்கி நேட்டோவில் அங்கமாவதற்கான பணிகளில் ஈடுபட்டு வருகிறார்.

இந்நிலையில் கடந்த 2 ஆண்டுகளாக நீடித்து வரும் போரில் முதல் முறையாக உக்ரைன் படைகள் ரஷ்யாவுக்குள் நுழைந்து தாக்குதல் நடத்தியுள்ளன. ரஷ்யாவின் கூர்க்ஸ் பிராந்தியத்தில் உக்ரைன் படைகள் சரமாரி தாக்குதல் நடத்தி வருகின்றன. இதனால் அங்கு அவசரநிலை அறிவிக்கப்பட்டு, பாதுகாப்பு நடவடிக்கையாகப் பொதுமக்கள் 76 ஆயிரம் பேர் அங்கிருந்து வெளியேற்றப்பட்டு உள்ளனர். அதேசமயம் கூர்க்ஸ் பிராந்தியத்தில் உக்ரைன் படைகள் முன்னேறுவதைத் தடுக்க ரஷ்யா தனது இராணுவத்தைக் குவித்து வருகிறது.

ரஷ்யாவுக்குள் நுழைந்து தாக்குதல் நடத்துவது குறித்து உக்ரைன் முதலில் மௌனம் காத்து வந்த நிலையில் தற்போது ஜனாதிபதி ஜெலன்ஸ்கி வெளிப்படையாக ஒப்புக் கொண்டுள்ளார். மேலும் ரஷ்யாவுக்கு எதிரான போரில் இது மிகப் பெரிய வெற்றி என்றும் தெரிவித்திருந்தார். ஆனால் உக்ரைனின் இந்த நடவடிக்கை மேலும் பதற்றத்தை அதிகரிக்கும் என ரஷ்ய ஜனாதிபதி புடின் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இதற்கிடையில் உக்ரைனில் ரஷ்ய இராணுவ வீரர்கள் கைப்பற்றி இருந்த ஐரோப்பாவின் மிகப்பெரிய ஜபோரிஜியா அணுமின் நிலையத்தை அழிக்க திட்டமிட்டு, ரஷ்ய வீரர்கள் அதற்கு தீ வைத்தனர். இதனால் கரும்புகை எழுந்து அணுவீச்சு தாக்கும் அபாயம் ஏற்பட்டது. இந்த சம்பவத்திற்கு உக்ரைன்தான் காரணம் என ரஷ்யாவும், ரஷ்யாதான் காரணம் என உக்ரைனும் மாறி மாறி குற்றம் சாட்டி வருகின்றன. (நி-6)

## இங்
## சீன



(பீஜி
இரல
கப்பல்
கடல் வ
போர்க்
உண்ணி
கப்பட்டு
வரத்தி
தாக ரா
வித்துள்
எச்ச
என்ற க
களில்
பிரித்து
ரஷ்யா
துள்ளத
டுள்ளது
வெ
பல்கை
கடற்பல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...ழக்கு நாடுகளிடையே போர்ப்பதற்றம்!

## பதிலடி கொடுப்பது எமது கடமை

### ❖ ஈரான் ஜனாதிபதி உறுதி

...டுத்துள்ள இராணுவ நடவடிக்கை ...படுத்துவதுடன் பிராந்தியங்களின் ...மையும் என அமெரிக்கா, பிரான்ஸ், ...ஆகிய மேற்கு நாடுகள் இணைந்து

...ர ...து ...ஸ் ரேலுக்கு பதிலடி கொடுப்பதில் ஈரான் உறுதியாக உள்ளது. இதை உறுதிப்படுத்தும் வகையில் இந்த வாரத்தில் ஈரான், இஸ்ரேல் மீதான தாக்குதலை முன்னெடுக்கும் என்று அமெரிக்க வெள்ளை மாளிகை எச்சரித்துள்ளது. எனவே இஸ்ரேலைப் பாது காக்க நீர்மூழ்கிகளையும், ஏர்கிராப்ட்களையும் அமெ ரிக்கா இஸ்ரேலுக்கு அனுப்பி வைத்துள்ளது

மேலும் அமெரிக் காவுடன் சேர்ந்து பிரான்ஸ், ஜேர்மனி, இத்தாலி, பிரிட் டன் ஆகிய மேற்கு நாடுகள் இணைந்து ஈரானை எச் சரித்துள்ளன. இஸ்ரேல் மீதான இராணுவ நடவ டிக்கை, கடுமையான விளைவுகளை ஏற்படுத்தும் எனவும் பிராந்தியங்களின் பாதுகாப்புக்கு அச்சுறுத்த லாக அமையும் எனவும் மேற்கூறிய நாடுகளின் தலைவர்கள் கூட்டாக அறிக்கை வெளியிட்டும், தனிப்பட்ட முறையில் தொடர்பு கொண்டு பேசியும் வலியு றுத்தியுள்ளனர். ஆனால் எங்கள் மீதான தாக் குதலுக்கு பதிலடி கொடுப்பது எங்களின் உரிமை என்று ஈரான் ஜனாதிபதி மசூத் பெசெஸ்கியான் உறுதிபடத் தெரிவித்துள்ளார். (நி-6)

## மின்னல் தாக்கி எரிந்த வீடு

(லண்டன்)

பிரித்தானியாவின் ஏவி மோர் பகுதியில் மின்னல் தாக் கியதில் வீடு ஒன்று தீப்பிடித்து எரிந்துள்ளதாக அந்நாட்டு ஊட கங்கள் செய்தி வெளியிட்டுள் ளன.


குறித்த சம்பவம் ஸ்கொட் லாந்தின் ஏவிமோர் பகுதி யின் கிராம்பியன் வியூவில் நேற்று முன்தினம் இடம் பெற்றுள்ளது.

தீப் பரவல் ஏற்பட்டதைய டுத்து தீயணைப்பு பிரிவின ருக்கு வழங்கிய தகவலைய டுத்து சம்பவ இடத்திற்கு விரை ந்த தீயணைப்புப் பிரிவினர் தீயினை கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்துள்ளனர்.

இந்தத் தீப் பரவலினால் வீட்டின் கூரை இடிந்து விழுந் துள்ளதுடன் அதிஷ்டவசமாக, வீட்டில் வசித்த குடும்பத்தினர் பாதுகாப்பாக வெளியேறி உயிர் தப்பியுள்ளனர்.

இதேவேளை கடந்த 24 மணி நேரத்தில் 15,000 இற்கும் மேற்பட்ட மின்னல் தாக்கப்பட்ட சம்பவங்கள் பதி வாகியுள்ளதுடன் கடும் மழை காலங்களில் எச்சரிக்கையாக இருக்குமாறு பொதுமக்களுக்கு ஸ்கொட்லாந்து தீயணைப்பு மற்றும் அவசர சேவைப் பிரிவி அறிவுறுத்தியுள்ளது. (நி-6)

## இங்கிலாந்து கடல்வழியாக சீனாவின் போர்க்கப்பல்கள்



(பீஜிங்)

இரண்டு சீனப் போர்க் கப்பல்கள் இங்கிலாந்து கடல் வழியாக பிரித்தானிய போர்க்கப்பல் ஒன்றினால் உன்னிப்பாகக் கவனிக் கப்பட்டு அபூர்வ போக்கு வரத்தில் பயணித்துள்ள தாக ராயல் கடற்படை தெரி வித்துள்ளது.

எச்எம்எஸ் ரிச்மண்ட் என்ற கப்பல் மூன்று வாரங் களில் இரண்டு முறை பிரித்தானியாவைக் கடந்து ரஷ்யாவுக்குப் பயணம் செய் துள்ளதாக அறிவிக்கப்பட் டுள்ளது.

வெளிநாட்டு போர்க்கப் பல்களை கண்காணிப்பது கடற்படைக்கு ஒரு வழக் கமான நடவடிக்கையாகும் ஆனால் சீன மக்கள் விடு தலை இராணுவம் (கடற் படை) அனுப்பிய கப்பல் களை விட ரஷ்யக் கப்பல் களை கண்காணிப்பதை பாதுகாப்பு அமைச்சகம் விளம்பரப்படுத்துவதாக நிபு ணர்கள் குற்றம் சாட்டியுள் ளனர்.

ஆயுதப்படை அமைச்சர் லூக் பொல்லார்ட், இங்கி லாந்தின் கடற்பரப்பின் இறையாண்மையை ராயல் கடற்படை எவ்வாறு தொடர்ந்து பாதுகாக்கிறது என்பதற்கு இந்த எஸ் கார்ட்கள் தெளிவான நிரூ பணம் ஆகும்" எனத் தெரி வித்துள்ளார். (நி-6)

## ஐரோப்பா கண்டத்தில்
## 47 ஆயிரம் பேர் வெப்பத்தால் பலி

(ஐரோப்பா)

ஐரோப்பா கண்டத்தில் வெயில் காரணமாக கடந்த ஆண்டு 47 ஆயிரம் பேர் உயிரிழந்துள்ளனர் என ஆய்வு ஒன்றில் தெரியவந்துள்ளது.

அதன்படி ஐரோப்பா கண்டத்தில் உள்ள 35 நாடுகளில் 823 பகுதிகளில் பதிவான வெப்ப அளவு, உயிரிழப்பு ஆகியவற்றை அடிப்படையாக வைத்து நடத்தப்பட்டுள்ளது

இந் நிலையில் அதிக பட்சமாக கிரீஸ் நாட்டில் உயிரிழப்பு விகிதம் 10 லட்சம் பேருக்கு 393 என்ற அளவில் உள்ளதுடன் அதற்கு அடுத்த இடங்களில் பல்கேரியா, இத் தாலி மற்றும் ஸ்பெயின் ஆகிய நாடுகள் உள்ளன.

ஜூலை மாதம் வீசிய வெப்ப அலை காரணமாக ஐரோப்பா வின் தெற்கு பகுதியில் வசித்தவர்களில் 40 சதவீதம் பேர் பாதிக்கப்பட்டனர் என்றும் ஓகஸ்ட் பிற்பகுதி வரை வீசிய வெப்ப அலையில் தான் அதிகம் பேர் உயிரிழந்துள்ளனர் என் றும் அந்த ஆய்வுவில் குறிப் பிடப்பட்டுள்ளது. (நி-6)

## இந்துக்களை காப்பாற்றுங்கள் அமெரிக்காவில் போராட்டம்




(வோஷிங்டன்)

பங்களாதேஷில் இந்துக்கள் மீதான தாக்குதலை நிறுத்த ... நடவடிக்கை எடுக்க வேண்டும் என அமெரிக்காவில் வாழும் இந்தியர்கள் போராட்டம் நடத்தினர்.

ஹூஸ்ட்டன் சுகர்லேண்ட் சிட்டி ஹாலில் நடந்த போராட்டத்தில் பலர் பங்கேற்றனர். இந்துக்களுக்கு ஆதரவாக கோஷங்கள் எழுப்பினர். பங்களாதேஷில் சிறுபான்மை இந்துக்கள் மீதான தாக்குதலை நிறுத்தி தெற்காசியாவில் அமை தியை நிலைநிறுத்த வேண்டும் என வலியுறுத்தினர்

இந்த போராட்டத்தில் 300 இந்தியர்கள் வங்கதேச வம்சா வளியைச் சேர்ந்த இந்துக் களும் போராட்டத்தில் பங்கேற்றனர்.

கடந்த வாரத்தில் பங்களா தேஷில் மாணவர்கள் போராட் டத்தால் அந்நாட்டு பிரதமர் ஷேக் ஹசீனா ராஜினாமா செய்து விட்டு இந்தியாவில் தஞ்சம் புகுந்தார். தற்போது அவரது புகலிடம் ரகசி யமாக வைக்கப்பட்டுள்ளது. சமீபத் திய போராட்டத்தில் 290 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். இந்துக்கள் வீடுகள் குறிவைத்து தாக்கப்பட்டு வருகின்றன. (நி-6)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அதிகரிக்கும்

## தடுப்பூசிகளுக்கான தட்டுப்பாடு

### ஆபத்தில் நோயாளிகள்

**கொழும்பு —**

**நாட்டின் மருத்துவமனை அமைப்பில் அத்தியாவசியத் தடுப்பூசிகளின் இருப்புத் தீர்ந்துவிட்டதாக வைத்தியர் மற்றும் சிவில் உரிமைகளுக்கான வைத்தியர் சங்கத்தின் தலைவர் வைத்தியர் ஜி.ஜி சமல் சஞ்சீவ தெரிவித்தார்.**

இதனால் நோயாளர்கள் மிகவும் சிரமத்திற்கு உள்ளாகியுள்ளதாகவும் மயக்கமடைந்த பின்னர் சுயநினைவை மீட்டெடுக்கும் நியோஸ்டிக் மைன் தடுப்பூசி மருந்து அநேகமான வைத்தியசாலைகளுக்குக் கிடைக்கப்பெறவில்லை எனவும் அவர் விளக்கமளித்துள்ளார்.

மேலும், மயக்க நிலையை அடைய பயன்படுத்தப்படும் லிக்னோகைன் தடுப்பூசி மற்றும் மஞ்சள் காமாலையைத் தடுக்க நோயாளிகளுக்கு வழங்கப்படும் ஹெபடைடிஸ் பி தடுப்பூசிக்கு தட்டுப்பாடு நிலவுவதாகவும் கூறப்படுகிறது. நாடளாவிய ரீதியில் அனைத்து வைத்தியசாலை களிலும் இந்த நிலை காணப் படுவதாகத் தெரிவிக்கப்படு கிறது.

நோயாளிகளின் உயிரைக் காப்பாற்ற பல அத்தியாவசிய மருந்துகள் மருத்துவமனை களில் உள்ளன. அவையும் தற்போது தீர்ந்துவிட்டன.

இது தொடர்பில் மருத்துவ வழங்கல் பிரிவின் பிரதிப் பணிப்பாளர் ஜி.விஜேசூரிய கூறுகையில், தற்போது பல தடுப்பூசிகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள போதிலும், எதிர்வரும் நாட்களில் புதிய தடுப்பூசிகள் கையிருப்பில் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது என அவர் தெரிவித்தார். (நி-6)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 200 | 200 | 180 | 150-200 | 200 |
| உருளைக்கிழங்கு | 180 | 220 | 200 | 180 | 200 |
| பச்சைமிளகாய் | 300 | 180 | 350 | 200-250 | 300 |
| தக்காளி | 250 | 330 | 300 | 250 | 300 |
| மரவள்ளிக்கிழங்கு | 180 | 200 | 180 | 100-140 | 180 |
| கோவா | 250 | 330 | 300 | 300 | 400 |
| கரட் | 350 | 350 | 350 | 300 | 350 |
| பூசணி | 180 | 160 | 150 | 150 | 120 |
| புடோல் | 80 | 150 | 140 | 140 | 200 |
| வாழைக்காய் | 300 | 250 | 250 | 150-200 | 250 |
| சின்ன வெங்காயம் | 250 | 300 | 300 | 250-400 | 300 |
| பெரிய வெங்காயம் | 250 | 250 | 250 | 230 | 200 |
| பாகற்காய் | 300 | 300 | 300 | 400 | 320 |
| வெண்டக்காய் | 180 | 100 | 180 | 200-250 | 400 |
| கருணைக் கிழங்கு | 160 | 160 | 160 | 150 | 240 |
| பயற்றங்காய் | 250 | 200 | 150 | 200-250 | 200 |
| லீக்ஸ் | 350 | 250 | 360 | 350 | 350 |
| பீற்றூட் | 200 | 300 | 300 | 250 | 240 |
| கறிமிளகாய் | 600 | 800 | 700 | 400 | 1200 |
| முருங்கைக்காய் | 250 | 120 | 150 | 60-90 | 150 |
| போஞ்சி | 600 | 650 | 600 | 450 | 700 |
| கத்தரிதம்புள்ள | 150 | 150 | 200 | - | 180 |
| கீரை - 1 பிடி | 80 | 60 | 50 | 50 | 80 |
| தேசிக்காய் | 600 | 650 | 500 | 400-450 | 550 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 130 | 70-90 | 60-110 | 80-130 |
| இராசவள்ளி | - | 950 | 1000 | 660 | 700 |
| வெங்காயப்பூ | 200 | 150 | 250 | - | 320 |
| முள்ளங்கி | 100 | 120 | 120 | 100 | 100 |
| பொன்னாங்காணி | 80 | 90 | 100 | 80 | 60 |
| வல்லாரை | 60 | 40 | 80 | 80 | 80 |
| ஈரப்பலா | 100 | 80 | 50 | 80 | 80 |

## இன்று ஒரு தகவல் 210



தென்கச்சி.கோ.சுவாமிநாதன்

# முயற்சி திருவினையாக்கும்

ஒரு ஆள் இருந்தான். அவனுக்கு வேதம் கற்றுக் கொள்ள வேண்டும் என்று ஒரு ஆசை.யாரிடம் கற்றுக் கொள்வது என்று யோசித்துப் பார்த்தான். அது என்ன சாதாரண விடயமா? தெருவிலே போகின்றவர்கள், வருபவர்களிடமா கற்றுக் கொள்ள முடியும்? இப்படி வீட்டிற்கு கொஞ்சம் வந்து விட்டுப் போங்கள். வேதத்தை கற்றுக் கொடுத்து விட்டு போங்கள் என்று?அவன் உடனே வேத விற்பன்னர் ஒருவரைத் தேடிப்போனான். கண்டுபிடித்தான்.

சுவாமி எனக்கு வேதம் கற்றுக் கொடுங்கள் என்றான்.அவர் பார்த்தார் வேதத்திலே மிகவும் சுலபமாக இருக்கக்கூடிய பகுதியை அவனிடம் சொல்லி எங்கே? இப்போது நான் சொன்னதைத் திரும்பச் சொல் பார்க்கலாம் என்றார். அவனுக்கு என்ன சொன்னார் என்றே புரியவில்லை. அப்புறம் எங்கே அதை திரும்ப சொல்வது. திருதிரு என்று முழித்தான். குரு பார்த்தார். இதோ பாருப்பா! உனக்கு வேதம் வராது வேற வேலை ஏதாவது இருந்தால் போய் பார். போய் வா என்று சொல்லி அவனை அனுப்பி வைத்து விட்டார். இவன் திரும்பி வந்துவிட்டான். இருந்தாலும் ஆசை விடவில்லை.

கொஞ்ச நாள் கழித்து மறுபடியும் அந்தக் குருவிடம் போனான்.ஏன் மறுபடியும் வந்திருக்கின்றாய் என்று கேட்டார். போன தடவை வேதம் கற்றுக் கொள்ள வேண்டும் என்று உங்களிம் வந்தேன். அது எனக்கு வராது என்று சொல்லி அனுப்பிவிட்டீர்கள். எனக்கு சுலபமாக வரக்கூடிய மந்திரத்தையாவது கொஞ்சம் சொல்லிக் கொடுங்கள் என்று கேட்டுக் கொண்டான். இவன் அங்கே போயிருந்த சமயத்திலே அந்த குரு தன்னுடைய மாணவர்கள் சில பேருக்கு தர்க்க சாஸ்திரம் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்தார். அதிலேயிருந்து ஒரு பகுதியை இவனிடம் எடுத்துச் சொன்னார். என்ன புரியுதா என்று கேட்டார்.

இந்த தர்க்க சாஸ்திரத்தை விட முன்னாலே சொன்ன வேதமே அவனுக்கு சுலபமாகத் தெரிந்தது.பேசாமல் திரும்ப போய்விட்டான். சரி இதோடயாவது விட்டானா? விடவில்லை. கொஞ்ச நாள் கழித்து மறுபடியும் திரும்ப வந்தான். இந்த சமயத்திலே அந்தக்குரு வியாகரணம் கற்றுக் கொடுத்துக்கொண்டிருந்தார் (இலக்கணம்). சரி இதையாவது எனக்கு கற்றுக் கொடுங்கள் என்று கேட்டான். அவரும் சளைக்காமல் அதிலே ஒரு பகுதியை சொன்னார்.

இதை விட இதற்கு முன்னாலே சொன்ன தர்க்க சாஸ்திரமே சுலபம் என்று நினைத்தான் அவன். பேசாமல் மறுபடியும் வெளியே வந்து விட்டான்.கொஞ்ச காலம் ஆகியது.இவன் மறுபடியும் அவரை தேடிக்கொண்டு போனான். ஏதாவது மிகவும் சுலபமாக உள்ள ஒரு மந்திரத்தை எனக்கு கற்றுக் கொடுங்கள் என்றான்.அவருக்கு ஒரு மாதிரி ஆகிவிட்டது. என்ன திரும்பி திரும்ப வந்து கொண்டிருக்கிறாய் என்று. இதோ பாருப்பா! இங்கேயிருந்து அங்கே அங்கேயிருந்து இங்கே. நீ இதையே தான் செய்து கொண்டிருக்கின்றாய்.அதனாலே உனக்கு சுலபமாக வருவது அது தான். அதையே சொல்லிக்கொண்டிரு என்று சொல்லி அனுப்பி விட்டார்.

இவன் என்ன நினைத்தான் இப்போது சொன்னாரே அது தான் மந்திரம் என்று நினைத்து விட்டான். நேராக ஒரு காட்டிற்குப் போனான். ஒரு பெரிய பாறை. அதற்கு முன்னாலே உட்கார்ந்திருந்து கொண்டான். இங்கேயிருந்து அங்கே அங்கேயிருந்து இங்கே இப்படியே திருப்பித் திருப்பி சொல்லி ஜெபம் செய்ய ஆரம்பித்து விட்டான்.ஒரு நாள் இரண்டு நாள் இல்லை. வருடக்கணக்கிலே அப்படி சொல்லிக் கொண்டு உட்கார்ந்து விட்டான். அவனைச் சுற்றி மணற்புற்றே உண்டாகியது. அந்த அளவிற்கு ஆகிவிட்டது.

ஒரு நாள் கண்ணை முழித்துப் பார்த்தான். வாய் மட்டும் ஜெபித்துக் கொண்டே இருந்தது. இங்கேயிருந்து அங்கே என்றான். அவ்வளவு தான் அவன் எதிரிலே ஒரு பெரிய பாறை இருந்ததே அது அப்படியே பறந்து போய் ரொம்ப தூரத்திற்கு அப்பால் போய் விழுந்தது.அடுத்தபடியா அவன் அங்கேயிருந்து இங்கே என்றான். மறுபடியும் அந்த பாறை பழைய இடத்திற்கே வந்து விழுந்தது. வேற ஒன்றுமில்லை. ஒரே வார்த்தையை திருப்பித் திருப்பி சொன்னதனாலே அது பலிக்க ஆரம்பித்து விட்டது.

இவன் உடனே குருவிடம் ஓடினான். நீங்கள் சொல்லிக் கொடுத்த மந்திரம் பலித்து விட்டது என்றான். நான் எங்கே மந்திரம் சொல்லிக் கொடுத்தேன் என்றார் அவர். பழசையெல்லாம் மறந்து விட்டார். அதையெல்லாம் எங்கே ஞாபகம் வைத்துக் கொள்ள போகின்றார். என்ன மந்திரம் எப்படி பலிச்சது என்று விசாரித்தார். உடனே இவன் இங்கேயிருந்து அங்கே என்றான். அவ்வளவு தான் எதிரிலே இருந்த குரு அப்படியே எழும்பி எட்டத்திலே போய்விழுந்தார். இவன் மறுபடியும் அங்கேயிருந்து இங்கே என்றான். ஆகாயத்திற்கு எழும்பிய குரு மறுபடியும் பழைய இடத்திற்கே வந்து விழுந்தார்.


இன்னொரு தடவை வேண்டும் என்றால் சொல்லட்டுமா என்றான் அவன். குரு பயந்து விட்டார் ஐயையோ வேண்டாம் என்று சொல்லிக் கையெடுத்துக் கும்பிட ஆரம்பித்தார். இந்த அளவிற்கு இவன் ஆனதற்கு காரணம் யார் என்று நினைக்கின்றீர்கள்?குரு விளையாட்டாக சொன்ன ஒரு வாக்கியத்திலே இவனுக்கு உண்டான விடாமுயற்சி, விசுவாசம், பக்தி இது எல்லாம் சேர்த்துத் தான் அது ஒரு மந்திரமாக பலிச்சது.

ஒரு உபன்யாசத்திலே கேட்ட கதை இது. இதிலே இருந்து நாம் தெரிந்து கொள்ள வேண்டியது என்ன என்றால் முயற்சி திருவினையாக்கும் என்பது தான். இங்கேயிருந்து அங்கே என்கின்ற மந்திரத்தை நானும் ஜெபிக்கலாம் என்று யோசிக்கிறேன் சார் என்றார் ஒருவர். எதற்கு என்று கேட்டேன். வீட்டுச் சொந்தக்காரர் வாடகை கேட்க வருகின்றபோது எல்லாம் அதை உபயோகப்படுத்தலாம் என்றார். சரி முயற்சித்துப் பாருங்கள். வெற்றி பெற்றால் எனக்கும் ஒரு வார்த்தை சொல்லுங்கள் நானும் முயற்சி செய்து பார்க்கிறேன் என்றார்.

சரி என்று சொல்லிவிட்டு அவர் போனார். கொஞ்சக் காலம் கழித்து மறுபடியும் அவரை சந்தித்தேன். என்னங்க மந்திரம் பலிச்சதா என்று விசாரித்தேன். பலிச்சது என்றார் நான் சொன்ன மந்திரம் ஆளையே தூக்கிப் போட்டுவிட்டது என்றார். எப்படி என்றார். வீட்டுக்காரர் வந்து வாடகை கேட்டார். உடனே நான் இந்த மந்திரத்தைச் சொன்னேன் என்றார். மந்திரம் உடனே அவரை தூக்கி எட்டத்திலே போட்டுவிட்டதா என்றேன். அப்படி இல்லை. அவர் என்னைத் தூக்கி வெளியிலே போட்டுவிட்டார். இப்போது நான் வேறு வீடு தேடிக் கொண்டிருக்கிறேன் என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தலை புறக்கணிக்குமாறு துண்டுப்பிரசுரம் விநியோகம்



(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதித் தேர்தலை புறக்கணிக்குமாறு கோரி, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினரால் யாழில் துண்டுப் பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டன.

கொக்குவில் பகுதியில் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன் மற்றும் கட்சியின் பிரதிநிதிகள் உள்ளிட்ட சிலர் இந்த நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர்.

கொக்குவில் சந்தி மற்றும் அதனைச் சூழவுள்ள பகுதிகளில் பொதுமக்களுக்கு துண்டுப் பிரசுரத்தினை வழங்கி எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலை புறக்கணிக்குமாறு மக்களிடம் கோரிக்கை விடுத்தனர். (நி-6)

# நீச்சல் போட்டிகள்

(அக்கராயன்)

முல்லைத்தீவு குமுழமுனையின் கந்தசாமிபத் மநாதன் அனுசரணையுடன் மாவட்ட விளையாட்டுத் துறையின் வழிநடத்தலில் குமுழமுனை ஐக்கிய விளையாட்டுக் கழக ஒழுங்குபடுத்தலில் நீச்சல் போட்டிகள் எதிர்வரும் 18 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு குமுழமுனை கொட்டுக்கிணற்றுப் பிள்ளையார் கோவில் ஆலய நீர்த்தடாக கேணியில் இடம் பெறவுள்ளது.

முல்லைத்தீவு மாவட்ட வீர, வீராங்கனைகள் போட்டியில் பங்குபற்ற முடியும்

மேலதிக தொடர்புகளுக்கு 077 089 8781 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளலாம் என ஏற்பாடடாளர்கள் அறிவித்துள்ளனர். (நி-6-350)

# (சா/ த) மாணவர்களுக்கான இலவசக் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

கொழும்பு அருள் கல்வி வட்டத்தின் ஏற்பாட்டில் க.பொ.த (சா/த) மாணவர்களுக்கான இலவசக் கருத்தரங்கிற்கான நேர சூசி மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 16 ஆம் திகதி மு.ப 8 - பி.ப 2 மணிவரை வவுனியா கந்தசுவாமி ஆலய மண்டபம், 17 ஆம் திகதி மு.ப 8.30-பி.ப 2 மணி வரை ஊர்காவற்றுறை பிரதேச செயலக மண்டபம், 18 ஆம் திகதி மு.ப 8.30- பி.ப 2 மணி வரை வட்டுக்கோட்டை தொழில்நுட்பக் கல்லூரி, 19 ஆம் திகதி மு.ப 7- பி.ப 2 மணிவரை யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபம் (பெண் பாடசாலை மாணவர்கள் மட்டும்), 20 ஆம் திகதி மு.ப 7-பி.ப 2 மணிவரை யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபம் (ஆண் பாடசாலை மாணவர்கள் மட்டும்), 21 ஆம் திகதி மு.ப 7- பி.ப 2 மணிவரை செல்வநாயகம் மண்டபம்- யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி (கலவன் பாடசாலை மாணவர்கள் மட்டும்) முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார் மாணவர்களுக்கு பிறிதொரு திகதியில் செயலமர்வு நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

க.பொ.த (சா/த) கடந்த கால வினாவிடைத் தொகுப்புப் புத்தகமும் இலவசமாக வழங்கி வைக்கப்படும்.

இது தொடர்பான மேலதிக தகவல்களுக்கு 077 113 3400 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளமுடியும் என ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (நி-6)



கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் உள்ள சரஸ்வதிதேவி திருவுருவச் சிலையை இலவசமாகப் புனரமைத்துத் தீந்தை பூசிய கலாசாலையின் பழைய மாணவரும் பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலய ஆசிரியருமாகிய செகராசசிங்கம் செந்தில்வேல் கலாசாலைச் சமூகத்தினரால் கௌரவிக்கும் நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது. (படம்: சிவசாந்தன்)

# கற்பகத்தருவின் பெருமையும் வல்லமையும் எதிர்பார்ப்பும்



**பேராசிரியர் கு.மிகுந்தன்**
**விவசாய உயிரியல்துறை,**

**வாருங்கள் எம்மினிய உறவுகளே!**

மக்கள் பனைசார் பொருளாதாரத்தின் மேன்மை நிலையை எதிர்பார்த்திருக்கின்ற காலத்தில் அது சார்ந்த தரமான அதிகம் பயன்படுத்துகின்றதான உற்பத்திகளை உருவாக்க வேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.

எமது அடையாளமாகி இப்பிர தேசங்களில் வளர்ந திருக்கின்ற பனை வளத்தை வினைத் திறனானதாக அந்நியச்செலாவாணியை ஈட்டும் தாவரமாக வலிமைமிக்க பொருளாதார விருட்சமாக மாற்ற வேண்டியது எம்முன்னே எழுந்திருக்கின்ற கடமைகளில் முக்கியமானதாகும்.

இதற்கான கண்டுபிடிப்புக்கள் முடுக்கிவிடப்படல் வேண்டும். அத்துடன் பனை வளங்களை இன்னமும் அதிகரிக்கின்ற செயற்பாடுகளும் விரைந்து செயற்படுத்தப்படல் வேண்டும்.

மக்கள் மயப்படுத்தப்பட்ட பனைசார் அபிவிருத்தி செயற்பாடுகளை அந்தந்த பிரதேசங்களின் முன்னெடுப்பதன் மூலமாக பனை வளத்தின் இருப்பு நலிவுறாத வண்ணம் பாதுகாத்துக் கொள்வதோடு பனைசார் பல்வகைத் தன்மையையும் மேம்படுத்த முடியும்.

எந்த காலநிலையையும் தாங்கி வளரும் கற்பகத் தருவை அதன் தனித்துவத்தை பேணிப் பாதுகாக்கின்ற நடவடிக்கைகள் இன்னமும் முடுக்கிவிடப்படல் வேண்டும்.

பனைமரத்தில் நோய் போன்றதொரு தோற்றப்பாடு கடந்த வருடங்களில் இலைகள் கருகி அதன் அழகும் கம்பீரமும் தொலைந்து போய்விட்டதனை காண முடிந்தது. இதுபற்றிய ஆய்வுகளும் முறைப்படி



தொடர்ச்சியாக நடை பெற்று விருட்சமாக வளர்ந்திருக்கின்ற பனைகளில் தொய்வு ஏற்படாது பாதுகாக்கும் செயற்பாடு அவசியம் ஏற்படுத்தப்படல் வேண்டும். எமது வாழ்வியலில் ஒன்றிப்பிணைந்திருக்கும் பனை வளத்தை அழியவிடு வது அது சார்ந்த மக்களின் வாழ் வியலுக்கான தளர்வு என்பதனை நாம் மறந்து விடலாகாது.

பனைமரத்தில் தென்னையைப் போன்ற பீடைகளின் தாக்கம் மிகமிக குறைவு. அதிலும் நோய்த்தாக்கங்கள் இதுவரை அறியப்படவுமில்லை.

ஒருவகை குழாய்ப் புழு (caseworm) வின் தாக்கம் யாழ்ப்பாணப் பண்ணைப் பகுதிகளிலும் தீவகத்திற்கு செல்லும் பாதையின் கரையோரத்திலுள்ள பனையோலைகளில் கண்டறியப்பட்ட போதும் அவை பீடைகள் என்னுமளவிற்கு அதீத சேதத்தை உண்டு பண்ணவில்லை. ஆனாலும் கண்டறியப்பட்டதால் அவற்றின் மேலும் எமக்கொரு கண் இருத்தல் அவசியம்.

எம்மூர் பனைகளில் ஒட்டி வாழும் வன்டா எனப்படும் ஓர்க்கிட் வகைத் தாவரம் அவ்வப்போது சிறியதாயினும் அழகிய பூக்களை உருவாக்கி அழகாக காட்சிதரும்.

கடுமையான வரட்சியான காலப்பகுதியிலும் இவ்வகை தாவரத்தின் பசுமை குறைந்திருக்காது. இதற்கான காரணமாக அதன் ஸ்பொன்ஞ் போன்ற தொங்கும் வேர்களில் வளியிலுள்ள ஈரப்பதனை உறுஞ்சுவதற்கான மைக்கோரைசா என்படும் பூஞ்சணத்தின் வளர்ச்சி காணப்படும்.

மைக்கோரைசா வன்டா வேர்களுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தின் பயனாக ஈரப்பதனை அகத்துறுஞ்சும் தன்மை வலுப்பெற்றிருக்கின்றது. இதனால் அது என்றும் வாடாமல் பசுமையாகவே காணப்படும். இந்த மைக்கோரைசாவை பிரித்தெடுத்த மிளகாய் வேருக்கு தொற்று ஏற்படுத்தியபோது அது வேர்களில் வளர்ச்சிபெற்று மிளகாயின் வளர்சியையும் ஊக்குவித்திருக்கின்றது. இதுபற்றிய மேலதிக ஆய்வுகள் இன்னமும் நடைபெறவேண்டும்.

காலம் கடினமாகி கொவிட் வைரசு நோய்த்தொற்று ஊர் முழுக்க பரவியபோது எரிப்பதற்கு எரிவாயுவும் மண்ணெண்ணையும் இல்லாது மக்கள் தவித்திருந்த போது பனைமரத்து ஊமல், பாளை குறிப்பாக ஆண்பாளை, கருக்கு, கங்கு, வீழ்ந்த ஓலை, மரச்சீவல், கொட்டு என்பன எரிப்பதற்கான விறகாக இதற்கன உருவாக்கப்பட்ட அடுப்பில் பயன்படுத்தப்பட்டன.

கொவிட் நோய் காலத்தில் கொடுக்கப்பட்ட முக்கியத்துவம் அதன் தீவிரம் குறைந்து இல்லாதபோது கவனிப் பாரற்று போய்விட்டது.

இவ்வளவு பயன்தரும் பயனற்றிருக்கும் இப்பொருட்களை பாவித்து உயிர்உரம் (Biochar) தயாரிப்பதற்கும் இன்னும் சிறந்த தாவர எரி பொருளை உற்பத்தி செய்வதற்கான ஆய்வு அவசியம் தேவை.

எமது பிரதேசத்து பொருட்களை வினைத்திறனாக பயன்படுத்தும் திட்டங்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டு எமது கையில் நாம் தங்கியிருக்கும் நிலைக்கு பனைசார் பயன்பாட்டை உயர்த்த வேண்டும்.

இவ்வழகிய தீவை சுற்றிலுமுள்ள கரையோரப் பகுதிகளில் சுனாமிபோன்ற பேரழிவுகள் வராதிருக்க உருவாக்கப்படும் பசுமைப்படையில் அவசியம் பனை மரத்திற்கான முன்னுரிமை கொடுக்கப்படல் வேண்டும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் - 3

காவியத் தொடர் 557





கொல்லன் அவனுடைய முகத்தை ஏற இறங்கப் பார்த்தான். பிறகு குரலைத் தாழ்த்திக்கொண்டு, "இலங்கையில் இருந்தபோது இளவரசர் அருள்மொழிவர்மரைப் பார்த்தாயா?" என்றான்.

உண்மையே சொல்லுவதென்று சற்றுமுன் சங்கல்பம் செய்து கொண்டிருந்த வந்தியத்தேவன், "பார்த்தேன்" என்றான்.

"கடைசியாக அவரை நீ எப்போது பார்த்தாய்?" இன்று காலையில் பார்த்தேன். கொல்லன் வந்தியத்தேவனைக் கோபமாய் நோக்கினான்.

விளையாடுகிறாயா தம்பி? இல்லை ஐயா! உண்மையைத்தான் சொன்னேன். இளவரசர் இப்போது எங்கேயிருக்கிறார் என்று கூடச் சொல்வாய் போலிருக்கிறதே?

ஓ! கேட்டால் சொல்லுவேன்! இளவரசர் எங்கே இருக்கிறார், சொல் பார்க்கலாம். நாகைப்பட்டினம், சூடாமணி விஹாரத்தில் இருக்கிறார்!

அப்பனே நானும் எத்தனையோ பொய்யர்களைப் பார்த்திருக்கிறேன். உன்னைப் போல் கட்டுக்கதை புனைந்துரைக்கக் கூடியவர்களைப் பார்த்ததேயில்லை.

வந்தியத்தேவன் தன் மனத்திற்குள் சிரித்துக் கொண்டான். புனைந்து கூறும் பொய்யை நம்புவதற்கு எல்லாரும் ஆயத்தமாயிருக்கிறார்கள். உண்மையைச் சொன்னால் நம்ப மறுக்கிறார்கள். இது நமது ஜாதக விசேஷம் போலும்!

"தம்பி! நீ இலங்கையிலிருந்து எப்போது புறப்பட்டாய்?" "நாலு நாளைக்கு முன்னால்!" "அதனாலே தான் உனக்குச் செய்தி தெரியவில்லை." "என்ன செய்தி ஐயா?"

"பொன்னியின் செல்வரைக் கடல் கொண்டு விட்டது என்ற செய்திதான்!" வந்தியத்தேவன் கஷ்டப்பட்டுத் திடுக்கிடுவது போல் பாசாங்கு செய்தான்.

"ஐயோ, அப்படியா! யார் சொன்னார்கள்?" "நேற்று முதல் இங்கெல்லாம் அப்படிப் பேச்சாயிருந்தது. இன்றைக்குப் பழுவேட்டரையர் இவ்வழியாகப் போனபோது ஊர்த்தலைவர்கள் அவரைக் கேட்டார்கள். அந்தச் செய்தி உண்மைதான் என்று பழுவேட்டரையர் கூறினார். அந்தச் சண்டாளப் பாவியின் தலையில் இடி விழவில்லையே!"

"ஏன் அந்தக் கிழவரை வைகிறாய்?" "அவராலேதான் இது நடந்திருக்கிறது. ஏதோ சூழ்ச்சி செய்து இளவரசரை அவரே கடலில் மூழ்கடித்து விட்டார் என்று ஊரார் சொல்கிறார்கள். அதனால் அவருக்காக ஏற்பாடு செய்திருந்த உபசாரங்களையும் நிறுத்திவிட்டார்கள்."

"இளவரசர் மீது இந்த ஊராருக்கு அவ்வளவு பிரியமா?" "கேட்க வேண்டுமா? ஊர் மக்கள் அவ்வளவு பேரும் இப்போது கண்ணீரும் கம்பலையுமாயிருக்கிறார்கள். இந்த ஊரார் மட்டும் என்ன? சோழநாடு முழுவதும் ஒலமிட்டு அழப்போகிறது. பழுவேட்டரையர்களைச் சபிக்கப் போகிறது. ஏற்கெனவே, சக்கரவர்த்தி நோய்வாய்ப்பட்டிருக்கிறார். இந்தச் செய்தி கேட்டு என்ன பாடு படுவாரோ, தெரியாது. இன்னும் என்னவெல்லாம் விபரீதங்கள் நடக்குமோ? சில நாளாக வானத்தில் தூமகேது தோன்றி வருகிறதே? அதற்கு ஏதேனும் நடந்து தானே தீரவேண்டும்?"

நடக்கக்கூடிய விபரீதங்கள் என்னவாயிருக்கக் கூடும் என்று வந்தியத்தேவன் எண்ணிப் பார்த்தான். தான் கூறியதை இந்தக் கொல்லன் நம்பாமலிருந்ததே நல்லதாய்ப் போயிற்று. தான் இனிமேல் பொய் சொல்லாவிட்டாலும், இளவரசரைப் பற்றிய உண்மையைச் சொல்ல வேண்டிய அவசியமும் இல்லை.

இளையபிராட்டி ஏதோ முக்கிய காரணத்திற்காகத்தானே அவரைச் சூடாமணி விஹாரத்தில் இருக்கச் சொல்லியிருக்கிறார்! இளவரசியைக் கண்டு பேசிய பிறகு, அவர் சொல்லும் யோசனைப்படி நடந்து கொள்ள வேண்டும். "தம்பி! என்ன யோசிக்கிறாய்?" என்றான் கொல்லன்.

(தொடரும்)





# சிறுவர் அரங்கம்

## மூடத்தனத்தால் ஏமாந்த வியாபாரி

(நேற்றைய தொடர்ச்சி...)

நீ மிகவும் நல்லவன், நீண்ட காலம் சொத்து சுகத்துடன் வாழ வேண்டும் என்ற நல்ல எண்ணத்தில் கூறுகிறேன். உன் பெண்ணுக்கு கெட்ட நேரம் தொடங்கி விட்டது. அவளுக்குத் திருமணம் செய்து வைத்தால், அன்று இரவே அவள் கணவனை இழந்துவிடுவாள்.

உனக்கும் மரணம் நேரிடும். ஆகையால், உன் மகளை ஒரு கூடையில் வைத்து மூடி, அதன் மேலே ஒரு விளக்கை ஏற்றி வைத்து, இன்று இரவு பன்னிரண்டு மணிக்கு கங்கையில் மிதக்க விடு" என்று கூறி புறப்பட்டு விட்டான் மௌனசாமி.

அவன் சொன்னபடியே வியாபாரி செய்தான். கங்கையில் வியாபாரியின் மகளுடன் கூடை மிதக்கிறது. மௌனசாமி ஆவலுடன் வேறு ஒரு பகுதியில் காத்திருக்கிறான்.

அடுத்த நாட்டு இளவரசன், கங்கைக் கரையில் இரவு முகாம் போட்டிருந்தான். மறுநாள் என்ன செய்வது என்று இளவரசனும் பரிவாரங்களும் யோசனையில் ஆழ்ந்திருந்தனர்.

அப்பொழுது விளக்குடன் கூடை ஒன்று மிதந்து வருவதைக் கண்டான் இளவரசன். அதை எடுத்து வரும்படி கட்டளையிட்டான்.

கூடை கொண்டு வரப்பட்டது. திறந்ததும் வியாபாரியின் மகள் அழுது கொண்டே எழுந்து விவரத்தைக் கூறினாள்.

இளவரசன் அவளைத் தேற்றி, காந்தர்வ மணம் செய்து கொண்டான். மௌனசாமி ஏமாற்றம் அடையாமல் இருக்க அதே கூடியில் கருங்குரங்கு ஒன்றை வைத்து மூடி, விளக்கை ஏற்றி வைத்து மிதக்கவிட்டனர் இளவரசனின் குழுவினர்.

கரையில் ஆவலோடு காத்திருந்த மௌனசாமி கூடையைக் கண்டு குதித்து ஓடி அதை தூக்கிச் சென்று திறந்தான்.

கூடைக்குள் இருந்த கருங்குரங்கு கோபத்துடன் மௌனசாமியைக் கடித்து, சின்னாபின்னமாக்கி விட்டது. அவன் வெளியில் தலைகாட்டவில்லை.

காவிஉடையில் திரிந்து, மூடத்தனமானவர்களை ஏமாற்றுகின்றனர் சிலர்.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவையானது எதுவென தேர்ந்தெடுக்கத் தெரிந்து விட்டால் தேவையற்றதும், பரபரப்பும் தானாகவே விலகி விடும்.
– அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## எல்லோரும் ஏறி விழுந்த குதிரையில் சக்கடத்தாரும் ஏறி சறுக்கி விழுந்தார்

நீ எதனால் அளக்கின்றாயோ அதனால் நீ அளக்கப்படுவாய் என்கிறார் இயேசுபிரான். இதனையே முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும் என்கிறது நம் தமிழ்.

ஆக, கன்மவினைக் கோட்பாட்டை இந்த உலகம் உணர்ந்தும் அனுபவித்தும் உள்ளதென்பது தெளிதற்குரியது. இஃது இங்கு ஒரு சிறு குறிப்பு மட்டுமே.

இப்போது ஜனாதிபதித் தேர்தலுக்கான களப் போராட்டம் நடந்தாகிறது.

இதில் பொதுக்கட்டமைப்பு என்ற ஒரு தரப்பு ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்தியுள்ளது.

ஒட்டுமொத்தத் தமிழ்த் தரப்புகளினதும் ஏகோபித்த ஆதரவுடன் தமிழ்ப் பொது வேட்பாளர் நிறுத்தப்படவில்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

இந்த விடயம் அனைவருக்கும் தெரிந்ததாயினும், அதனை மீண்டுமொரு தடவை கூறுகின்ற தேவை ஏற்பட்டுள்ளமையால் அதனை இங்கு மீளப் பிரஸ்தாபித்தோம்.

ஆம், பொதுக்கட்டமைப்பு என்பது சில சிவில் சமூக அமைப்புகளையும் சில அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளையும் உள்ளடக்கியது.

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொது வேட்பாளர் ஒருவரைக் களமிறக்க வேண்டும் என்ற ஒரே நோக்கத்துக்காக ஒன்றுசேர்ந்த மேற்குறிப்பிட்ட தரப்பினர்; தமிழ்ப் பொது வேட்பாளரை நிறுத்துவதனூடாக, தமிழ் மக்களின் ஒற்றுமையை – அவர்களின் அபிலாசைகளை உலகுக்கு வெளிப்படுத்த முடியும் எனக் கருத்துரைத்தனர்.

தவிர, பொது வேட்பாளர் என்ற விடயம் சிங்களத் தரப்புகளைத் தமிழ் மக்கள் நம்பத் தயாரில்லை என்பதை அடிக்கோடிடும் என்பதாகவும் பொதுக்கட்டமைப்பின் பதவுரை அமைந்திருந்தது.

கோட்பாட்டு ரீதியில் அவர்கள் முன்வைத்த பதவுரை ஏற்புடையதே.

ஆயினும் அது வெறும் இலட்சியக் கோட்பாடாக மட்டும் இருக்கும்போது, அதன் விளைவு பாரதூரமானதாக அமையும் என்பது மறுதலிக்க முடியாத உண்மை.

தவிர, ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொது வேட்பாளரை முன்னிறுத்துவது என்ற நோக்குடன் ஒன்றிணைந்த பொதுக்கட்டமைப்பு உள்ளக உடன்படிக்கை ஒன்றைச் கைச்சாத்திட்டிருந்தது.

தமிழ்ப் பொது வேட்பாளர் என்ற இலக்குடன் பயணிப்பதை உறுதி செய்வதற்காக உடன்படிக்கை செய்யப்பட்டதாயினும், ஆரம்ப கட்டத்திலேயே குறித்த உடன்படிக்கை உறுதியானதல்ல என்ற உண்மை உணர்த்தப்பட்டுள்ளது.

ஆம், தமிழ்ப் பொது வேட்பாளரைக் களமிறக்குவதில் உறுதியாக இருப்பதாக கையொப்பமிட்டவர்களில் சிலர் பயணத்தின் தொடக்கத்திலேயே பாதை மாறி, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்துள்ளனர்.

தவிர, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவையும் சந்தித்தாயிற்று.

இதென்ன ஆச்சரியம். தமிழ்ப் பொது வேட்பாளரை நிறுத்துவதென முடிவு செய்த பின்பு, ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுகின்ற வேட்பாளர்களைச் சந்திப்பதென்பது எந்தவகையிலும் பொருத்துடையதல்ல.

அதையும் கடந்து, தம்முடனான சந்திப்பின்போது சமஷ்டி பற்றி ஆராயலாமென ஜனாதிபதி ரணில் கூறினார் என்று அறிக்கை விடுகின்ற அளவுக்கு நிலைமை வந்துள்ளதெனில், எல்லோரும் ஏறி விழுந்த குதிரையில் சக்கடத்தாரும் ஏறிச் சறுக்கி விழுந்த கதையாக பொதுக்கட்டமைப்பை உருவாக்கியவர்களின் நிலை வந்துவிட்டது எனக் கூறுவதில் எந்தத் தவறுமில்லை.

# தென்னிலங்கையில் பழம்பெரும் கட்சிகள் தேர்தலில் காணாமல் போனது போன்று

## தமிழர் பரப்பிலும் நடைபெறும் – ஒருங்கிணைந்த தமிழர் கட்டமைப்பு

தென்னிலங்கையின் பழம்பெரும் அரசியல் கட்சிகள் இந்த ஜனாதிபதித் தேர்தலில் காணாமற்போனது போல, தமிழர் பரப்பிலும் கட்சிகளின் சின்னங்கள் காணாமற்போகும் நிலைவரும். ஆதலால், தூயதமிழ்த் தேசியவாதிகளும், இளையோரும் புதிய அரசியல் கூட்டமைப்பாக உருவெடுக்க வேண்டும் என்று ஒருங்கிணைந்த தமிழர் கட்டமைப்பு வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பாக ஒருங்கிணைந்த தமிழர் கட்டமைப்பு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தென்னிலங்கையின் பழம்பெரும் கட்சிகளின் சின்னங்களான யானையும், கையும் தற்போதைய ஜனாதிபதித் தேர்தலில் காணாமற்போயுள்ளன. அதுபோன்று தமிழர் பரப்பிலும் சின்னங்கள் காணாமற்போகும் நிலை விரைவில் வரலாம். தூயதமிழ் தேசியவாதிகளும், இளையோரும் புதிய அரசியல் கூட்டமைப்பாக உருவெடுக்க வேண்டும். அதனைக் கட்சி அரசியலுக்கு அப்பாற்பட்ட மூதவை வழிநடத்த வேண்டும்.

தமிழர்கள் புதிய செல்நெறியில் தமது அரசியல் பாதையை முன் கொண்டு செல்ல வேண்டும் என்பதைத் தற்போதைய நிகழ்வுகள் எடுத்துக் காட்டுகின்றன. தமிழ்ப் பொது வேட்பாளர் களத்தை எம்மினம் சரியாகப் புரிந்து கொள்ள உச்ச பட்ச பரப்புரைகளை எல்லாத் தளங்களிலும் முன்னெடுப்போம். எதிர்கால வரலாறு நிச்சயம் சுயநலங்களை கடந்து குறும்கட்சி அடையாளங்களை துறந்து, தமிழ்த் தேசிய திரட்சிக்காக அர்ப்பணித்த மனிதர்களை நிலைநிறுத்தும் என்பதில் ஐயமில்லை என்றுள்ளது. (ம-7)

## வருடாந்த மஹோற்சவம்

நாகர்கோவில் வடக்கு அருள்மிகு முருகையா தேவஸ்தான வருடாந்த மஹோற்சவப் பெருவிழா எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை(18) கொடியேற்றத் துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 16 நாட்கள் உற்சவம் இடம் பெறும்.

அந்த வகையில் 27 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை பூங்காவனத் திருவிழாவும், 28ஆம் திகதி புதன்கிழமை வசந்தோற்சவமும், 29 ஆம் திகதி வியாழக்கிழமை திருமண உற்சவமும், 30ஆம் திகதி வெள்ளிக் கிழமை வேட்டை உற்சவமும், 31 ஆம் திகதி சனிக்கிழமை சப்பற உற்சவமும், 01 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இரதோற்சவமும், 02 ஆம் திகதி திங்கட் கிழமை தீர்த்த உற்சவமும் மாலை கொடியிறக்கமும் இடம்பெறும் என ஆலய நிர்வாக சபையினர் அறிவித்துள்ளனர். (ம-7,60)

## நீர்க் கட்டணத்தைத் திருத்த அமைச்சரவை அனுமதி

*(கொழும்பு)*

தற்போதுள்ள குடிநீர்க் கட்டணத்தைத் திருத்த அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

கடந்த ஜூலை 16ம் திகதி முதல் மின் கட்டணம் குறைக்கப்பட்டுள்ளதால், எரிபொருள், இரசாயனம், வட்டி செலவுகள் போன்றவற்றின் விலை குறைப்பைக் கருத்தில் கொண்டு இந்த தண்ணீர் கட்டணத் திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

அதற்கமைவாக நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சர் அவர்களினால் முன்வைக்கப்பட்ட நீரக் கட்டணத்தை, பின்வருமாறு திருத்துவதற்கான யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (ம-7)

## பாவனைக்குப் பொருத்தமற்ற ஒரு தொன் பருப்பு மீட்பு

மனித பாவனைக்குப் பொருத்தமற்ற சுமார் ஒரு தொன் பருப்பு, நுகர்வோர் விவகார அதிகார சபை அதிகாரிகளினால் கைப்பற்றப்பட்டுள்ளது.

கொழும்பில் - புறக்கோட்டையில் உள்ள களஞ்சியசாலையொன்றில் நேற்று (13) இடம்பெற்ற சோதனையொன்றின்போதே மனித பாவனைக்குப் பொருத்தமற்ற குறித்த பருப்பு கைப்பற்றப்பட்டுள்ளது.

களஞ்சிய சாலையுடன் தொடர்புடைய வர்த்தகர், பருப்பை மீளப் பதப்படுத்தி சந்தைக்கு அனுப்பும் பணியில் ஈடுபட்டிருந்ததாக நுகர்வோர் விவகார அதிகார சபை தெரிவித்துள்ளது. (ம-7)

4 கோடி பெறுமதியான

## தங்க பிஸ்கட்டுக்களுடன் கட்டுநாயக்கவில் ஒருவர் கைது

*(கொழும்பு)*

சட்டவிரோதமான முறையில் நான்குகோடியே நாற்பது இலட்சம் ரூபா பெறுமதியான 16 தங்க பிஸ்கட்டுக்களை கடத்தி வந்த வர்த்தகர் ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தின் வருகை முனையத்தில் நேற்றுக் காலை சுங்கப் போதைப் பொருள் கட்டுப்பாட்டு பிரிவின் அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.

காலியைச் சேர்ந்த 28 வயதுடைய வர்த்தகரான இவர் அடிக்கடி பயணங்களை மேற்கொண்டு வருகிறார்.

அவர் நேற்றுக் காலை 6 மணியளவில் டுபாயிலிருந்து ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் விமானமான UL-226 இல் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளார்.

இந்த தங்க பிஸ்கட்டுக்கள் 8 வீதம் 2 பொதிகளாக பொதி செய்யப்பட்டு, மறைத்துக் கொண்டு வந்த பையை விமான நிலையத்திற்கு வெளியே எடுத்துச் செல்ல முயன்றபோது சுங்க அதிகாரிகளால் கைது செய்யப்பட்ட குறித்த வர்த்தகர் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளதுடன், மேலதிக விசாரணைகளை கட்டுநாயக்க விமான நிலைய சுங்க அதிகாரிகள் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

காதலியைத் தேடிச் சென்றவர்

## கிணற்றில் வீழ்ந்து பரிதாபகரமாக மரணம்

*(நீர்கொழும்பு)*

நீர்கொழும்பில் இருந்து சிலாபம் தொடுவா பிரதேசத்திற்கு தனது 19 வயதுடைய காதலியை தேடிச் சென்ற 30 வயதுடைய இளைஞனின் சடலம், குறித்த பகுதியில் உள்ள பாழடைந்த கிணற்றில் இருந்து மீட்கப்பட்டதாக தொடுவாப் பொலிஸார் தெரிவித்தனர்.

நீர்கொழும்பு, திபிரிகஸ்கட்டுவ ஹரிச்சந்திரபுர பிரதேசத்தை சேர்ந்த சமித் மதுசங்க என்ற இளைஞனே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

ஒரு பிள்ளையின் தந்தையான குறித்த நபர் தனது மனைவியை பிரிந்து வாழ்ந்து வந்த நிலையில் அவர் வசித்து வந்த அதே பகுதியில் உள்ள 19 வயது இளம்பெண் ஒருவருடன் காதல் உறவில் ஈடுபட்டுள்ளார்.

தங்களுடைய மகள் திருமணமான ஒருவருடன் காதல் உறவில் ஈடுபட்டு வருவதை அறிந்த குறித்த பெண்ணின் பெற்றோர்கள் மகளை, மஹவெவ தொடுவா பிரதேசத்தில் உள்ள உறவினரின் வீட்டில் தங்க வைத்துள்ளனர்.

இது தொடர்பாக தகவல் அறிந்த இளைஞன் கடந்த 10ஆம் திகதி இரவு தனது காதலியைத் தேடி அவர் தங்கி இருந்த வீட்டருகில் சென்று மறைவாக இருந்துள்ளார்.

வீடடுக்கு வெளியில் யுவதிசென்றபோது இளைஞன் வந்து அவரை அழைத்துள்ளதுடன் தனது காதலனைக் கண்டதும் அவர் வீட்டுக்குள் ஓடிச் சென்று உறவினர்களுக்கு அறிவித்துள்ளதாகவும், அப்போது இளைஞனை பிடிக்க வீட்டில் இருந்த சிலர் துரத்திச் சென்றபோது அவர் இருட்டிலேயே தப்பியோடிய நிலையில் அருகில் இருந்த பாழடைந்த கிணற்றில் ஏதோ விழும் சத்தம் கேட்டதாகப் பெண்ணின் உறவினர்கள் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளனர்.

மேலும் இது தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதித் தேர்தல் 2024 செப்டெம்பர் 21
# கடந்தகால ஜனாதிபதித் தேர்தல்கள் பற்றிய ஒரு மீள் பார்வை



கலாநிதி க. தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர் - எல்லை நிர்ணய ஆணைக்குழு.

09

அப்போது புகழேணியின் உச்சியிலிருந்த மகிந்தவுக்கு போட்டியே இருக்கவில்லை. குறைந்தது 73 சதவீத வாக்குகளைப்பெற்று அமோக வெற்றியீட்டுவார் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் மற்றொரு யுத்த வெற்றி கதாநாயகனான சரத் பொன்சேகா தேர்தல் களத்தில் இறங்கிய போது நிலைமை மாறியது. புலிகளை வெற்றி கொண்டதில் மகிந்தவுக்கும் பொன்சேகாவுக்கும் சமபங்கு இருப்பதாக சிங்கள மக்கள் கருதினர்.

ஆனால் சரத் பொன்சேகா தேர்தல் களத்தில் இறங்கிய போது நிலைமை பொன்சேகா பக்கம் மாறியது. யுத்தத்தின் வெற்றிக்கு மகிந்த ராஜபக்ஷவால் ஏக உரிமை கொண்டாட முடியவில்லை. ஊழல், குடும்ப ஆதிக்கம் வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு ஆகிய ஏனைய பிரச்சினைகள் முன்னுக்கு வந்தன.

பொன்சேகா யுத்த களத்திலிருந்து உயிரை பணயம் வைத்து நாட்டுக்காகப் போராடிய தியாகி எடுத்தகாரியத்தை முடிக்கக் கூடியவர். ஊழலற்றவர், என்ற மக்கள் அபிப்பிராயம் நாளுக்கு நாள் அதிகரித்து வந்தது. இந்த நிலைமை நிதர்சனமாகத் தெரிந்தது. இதனால் தான் சந்திரிகா. பொன்சேகாவை ஆதரிக்கத் தொடங்கினார்.

ஆனால் தேர்தல் முடிவில் வழமை போல ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரம் வெற்றி பெற்றது. மகிந்த ராஜபக்ஷ 6015934 (57.88%) வாக்குகளையும் சரத் பொன்சேகா 4,173,185 (40.15%) வாக்குகளையும் பெற்றனர். வித்தியாசம் 184 2749 (பதினெட்டு லட்சம்) வாக்குகள்.

சரத் பொன்சேகாவின் தோல்விக்கு இரண்டு காரணங்களைத் தான் பிரதானமாகக் கூறமுடியும். ஒன்று அரச அதிகாரம் கையிலில்லாமை. மற்றது அவரது தேர்தல் அமைப்பு நிர்வாக பணிகள் அவரது கட்டுப்பாட்டிலில்லாமை. பெரும்பாலான தமிழ்பேசும் மக்கள் இத்தேர்தலில் சரத் பொன்சேகாவை ஆதரித்தனர்.

மகிந்த ராஜபக்ஷ 16 மாவட்டங்களிலும் எதிரணி வேட்பாளர் சரத் பொன் சேகா தமிழர் மற்றும் முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழும் 6 மாவட்டங்களிலும் வெற்றிபெற்றுள்ளனர்.

இம்முறை நடைபெற்ற இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின் 6ஆவது ஜனாதிபதி தேர்தலின் பின்னர் தேர்தல் முடிவுகள் தொடர்பாக பல்வேறு வாதப்பிரதிவாதங்கள் பலதரப்பட்டவர்களாலும் முன்வைக்கப்பட்டன.

இவ்வாறான விமர்சனங்கள் வேறு எந்தவொரு தேர்தலின் பின்னரும் முன்வைக்கப்படவில்லை என்பது ஆய்வாளர்களின் கருத்தெனலாம்.

1994 ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் திருமதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க அவர்கள் சுமார் 19 இலட்சம் வாக்குகளால் அமோக வெற்றி பெற்றார்.

தேர்தலுக்கு முன்ன தாகவே அவருடைய ஆதரவு அலை பலமானதாக வீசியதனை அறியமுடிந்தது.

எனினும் மகிந்த ராஜபக்ஷ அவர்கள் சுமார் 18 இலட்சம் வாக்குகளால் வெற்றி பெற்றதாக அறிவித்த போதிலும் தேர்தலுக்கு முன்னதாக அவருடைய ஆதரவு அலை பலமானதாக வீசியதனை அக்காலத்தில் எங்கும் காணப்பட்டதாக அறியமுடியவில்லை.

### 6வது ஜனாதிபதி தேர்தல் முடிவுகள் -2010

கிழக்கு மாகாணம்

| | மட்டக்களப்பு மாவட்டம் | | திகாமடுல்லை மாவட்டம் | | திருகோணமலை மாவட்டம் | |
|---|---|---|---|---|---|---|
| வேட்பாளர் | வாக்குகள் | % | வாக்குகள் | % | வாக்குகள் | % |
| சரத் பொன்சேகா | 146,057 | 68.93% | 153,105 | 49.94% | 87,661 | 54.09% |
| மகிந்த ராஜபக்ச | 55,663 | 26.27% | 146,912 | 47.92% | 69,752 | 43.04% |
| சன்ன ஜானக சுகத்சிரி கமகே | 1,666 | 0.79% | 1,101 | 0.36% | 765 | 0.47% |
| மு. காசிம் முகமது இஸ்மைல் | 3,016 | 1.42% | 1,270 | 0.41% | 1,115 | 0.69% |
| விக்கிரபாகு கருணாரத்தின | 366 | 0.17% | 115 | 0.04% | 125 | 0.08% |
| ஏ.எஸ்.பி.லியனகே | 468 | 0.22% | 404 | 0.13% | 218 | 0.13% |
| சரத் மனமேந்திரா | 645 | 0.30% | 308 | 0.10% | 252 | 0.16% |
| எம். கே. சிவாஜிலிங்கம் | 633 | 0.30% | 369 | 0.12% | 302 | 0.19% |
| லால் பெரேரா | 541 | 0.26% | 447 | 0.15% | 240 | 0.16% |
| அச்சல அசோக சுரவீர | 612 | 0.29% | 641 | 0.21% | 311 | 0.19% |
| மகிமன் ரஞ்சித் | 484 | 0.23% | 683 | 0.22% | 346 | 0.21% |
| சிரிதுங்க ஜெயசூரிய | 284 | 0.13% | 223 | 0.07% | 247 | 0.16% |
| விஜே தாஸ் | 185 | 0.09% | 84 | 0.03% | 80 | 0.06% |
| இதுருஸ் முகமது இலியாஸ் | 125 | 0.06% | 135 | 0.04% | 105 | 0.06% |
| உக்குபண்டா விஜேக்கூன் | 232 | 0.11% | 240 | 0.08% | 147 | 0.09% |
| முத்து பண்டார தெமினிமுல்ல | 87 | 0.04% | 48 | 0.02% | 45 | 0.03% |
| சனத் பின்னாதுவ | 201 | 0.09% | 94 | 0.03% | 82 | 0.05% |
| உபாலி சரத் கொங்கஹகே | 107 | 0.05% | 45 | 0.01% | 55 | 0.03% |
| முகமது முஸ்தபா | 172 | 0.08% | 139 | 0.05% | 76 | 0.05% |
| பத்தரமுல்ல சீலரதன தேரோ | 102 | 0.05% | 70 | 0.02% | 42 | 0.03% |
| சேனரத்ன டி சில்வா | 124 | 0.06% | 71 | 0.02% | 48 | 0.03% |
| அருணா டி சொய்சா | 121 | 0.06% | 58 | 0.02% | 58 | 0.04% |
| செல்லுப்படியான வாக்குகள் | 211,891 | 97.97% | 306,562 | 99.06% | 162,072 | 98.62% |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 4,396 | 2.03% | 2,912 | 0.94% | 2,432 | 1.48% |
| மொத்தமாக வாக்களித்தவர்கள் | 216,287 | 64.83% | 309,474 | 73.54% | 164,504 | 68.22% |
| பதிவு செய்யப்பட்ட வாக்குகள் | 333,644 | | 420,835 | | 241,133 | |

### ஏழாவது ஜனாதிபதித் தேர்தல் -2015

### 6வது ஜனாதிபதி தேர்தல் முடிவுகள் -2010

வட மாகாணம்

| | யாழ் மாவட்டம் | | வன்னி மாவட்டம் | |
|---|---|---|---|---|
| வேட்பாளர் | வாக்குகள் | % | வாக்குகள் | % |
| சரத் பொன்சேகா | 113,877 | 63.84% | 72,533 | 63.76% |
| மகிந்த ராஜபக்ச | 44,154 | 24.75% | 32,447 | 28.25% |
| சன்ன ஜானக சுகத்சிரி கமகே | 3,325 | 1.86% | 799 | 0.70% |
| மு. காசிம் முகமது இஸ்மைல் | 3,370 | 1.89% | 2,063 | 1.81% |
| விக்கிரபாகு கருணாரத்தின | 1,128 | 0.63% | 220 | 0.20% |
| ஏ.எஸ்.பி.லியனகே | 645 | 0.36% | 232 | 0.20% |
| சரத் மனமேந்திரா | 732 | 0.41% | 297 | 0.26% |
| எம். கே. சிவாஜிலிங்கம் | 3,205 | 1.80% | 550 | 0.48% |
| லால் பெரேரா | 696 | 0.39% | 283 | 0.25% |
| அச்சல அசோக சுரவீர | 1,310 | 0.73% | 366 | 0.32% |
| மகிமன் ரஞ்சித் | 571 | 0.32% | 303 | 0.27% |
| சிரிதுங்க ஜெயசூரிய | 840 | 0.47% | 214 | 0.19% |
| விஜே தாஸ் | 657 | 0.37% | 133 | 0.12% |
| இதுருஸ் முகமது இலியாஸ் | 485 | 0.27% | 86 | 0.08% |
| உக்குபண்டா விஜேகூன் | 683 | 0.38% | 121 | 0.11% |
| முத்து பண்டார தெமினிமுல்ல | 260 | 0.15% | 54 | 0.05% |
| சனத் பின்னாதுவ | 412 | 0.23% | 130 | 0.11% |
| உபாலி சரத் கொங்கஹகே | 518 | 0.29% | 133 | 0.12% |
| முகமது முஸ்தபா | 485 | 0.27% | 87 | 0.08% |
| பத்தரமுல்ல சீலரதன தேரோ | 307 | 0.17% | 73 | 0.06% |
| சேனரத்ன டி சில்வா | 358 | 0.20% | 74 | 0.07% |
| அருணா டி சொய்சா | 351 | 0.20% | 65 | 0.06% |
| செல்லுப்படியான வாக்குகள் | 178,369 | 96.35% | 111,263 | 97.80% |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 6,763 | 3.65% | 2,503 | 2.20% |
| மொத்தமாக வாக்களித்தவர்கள் | 185,132 | 25.66% | 113,766 | 42.61% |
| பதிவு செய்யப்பட்ட வாக்குகள் | 721,359 | | 266,975 | |

இலங்கையின் ஏழாவது ஜனாதிபதியைத் தேர்ந்தெடுக்க 2015 ஜனவரி 8ஆம் நாளன்று நடைபெற்றது. முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் இரண்டாவது ஆட்சிக் காலம் 2016 ஆம் ஆண்டில் நிறைவடைவதற்கு முன்னதாகவே புதிய தேர்தலுக்கான அறிவிப்பு 2014 நவம்பர் 21ஆம் நாள் அறிவிக்கப்பட்டது. இத்தேர்தலுக்கான வேட்புமனுக்கள் 2014 டிசம்பர் 8 அன்று ஏற்றுக் கொள்ளப்பட்டது.

மகிந்த ராஜபக்ஷ ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணியின் வேட்பாளராக மூன்றாவது தடவையாகவும் தேர்தலில் போட்டியிடவிருப்பதாக அறிவித்தார். அதே வேளையில் ராஜபக்ஷவை எதிர்த்துப் போட்டியிட எதிர்க்கட்சியினர் ராஜபக்ஷவின் அமைச்சரவையில் சுகாதாரத் துறை அமைச்சராக இருந்து, ஆளும் கூட்டணியில் இருந்து வெளியேறிய மைத்திரிபால சிறிசேனவை பொது வேட்பாளராக அறிவித்தனர். மைத்திரிபால சிறிசேன 51.28% வாக்குகள் பெற்றதை அடுத்து 2015 ஜனவரி 9 ஆம் நாளன்று புதிய ஜனாதிபதியாக அறிவிக்கப்பட்டார். ராஜபக்ஷ 47.58% வாக்குகள் பெற்றார். மொத்தமுள்ள 22 தேர்தல் மாவட்டங்களில் மைத்திரிபால சிறிசேன கொழும்பு, கம்பஹா, கண்டி, நுவரெலியா, யாழ்ப்பாணம், வன்னி, மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை, புத்தளம், பதுளை, பொலநறுவை ஆகிய 12 மாவட்டங்களில் முதலாவதாக வந்து வெற்றி பெற்றார். (தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 36 பேர்...

நிறைவடையவுள்ளது.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்புமனுக்களை ஏற்றுக்கொள்வது நாளை (15) காலை 9.00 மணி முதல் 11.00 மணி வரை ஆரம்பமாகவுள்ளது.

வேட்புமனு ஏற்றுக்கொள்ளும் தினத்தன்று இராஜகிரியவில் உள்ள தேர்தல் செயலகத்தில் விசேட பாதுகாப்பு வேலைத்திட்டம் அமுல்படுத்தப்படும் எனப் பொலிஸார் அறிவித்துள்ளனர். (ம-7)

## ரணிலுக்கு...

சேனாரட்னவுக்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம் கொழும்பு கங்காராம விகாரையில் கைச்சாத்திடப்பட்டது.

ராஜித சேனாரட்னவின் இந்தத் தீர்மானத்தால் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவின் வெற்றிக்கு தடைகள் ஏதும் ஏற்படாதென ஐக்கிய மக்கள் சக்தி அறிவித்துள்ளது. (ம-7)

## இளைஞன்...

னைச் சேர்ந்த அமுதலிங்கம் தினேஷ் (வயது-31) என்ற இளைஞனே சடலமாக மீட்கப்பட்டவராவார்.

நேற்று முன்தினம் தனது தமக்கையின் இல்லத்துக்குச் சென்ற இளைஞன் அங்கு தூக்கிட்டு உயிர்மாய்த்துள்ளார்.

இந்நிலையில் நேற்று அதிகாலை இளைஞனின் சடலம் அடையாளம் காணப்பட்டு யாழ்.போதனா வைத்திய சாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி பிரேம குமார் மேற்கொண்டார். (ம-7)

## வேதனத்தைத்...

யாடி உரிய தகவல்களை ஆராய்ந்து அறிக்கையைத் தயாரித்துள்ளது.

அந்த அறிக்கையின் பரிந்துரைகளின் பிரகாரம், 2025ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தின் முன்மொழிவுகளுக்கு அங்கீகாரம் வழங்குவதற்கும் அதற்கான முன்மொழிவுகளை நடைமுறைப்படுத்துவதற்கும் ஜனாதிபதியினால் முன்வைக்கப்பட்ட பிரேரணை அமைச்சர்கள் சபையினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. (ம-7)

## யாழைச்...

அனைவரையும் உடனடியாகக் கைது செய்ய வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து குறித்த போராட்டத்தை ஆரம்பித்துள்ளார். (ம-7)

## ஜனாதிபதி...

விப்பு வெளியாக உள்ளன.

பொதுஜன ஐக்கிய முன்னணி என்ற பெயரில் இந்தக் கூட்டணி உருவாக்கப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அரசியல் கட்சிகள், சிவில் அமைப்புக்கள், தொழிற்சங்கங்கள் எனப் பல தரப்புகள் இந்தக் கட்சியில் அல்லது கூட்டணியில் இணைய உள்ளன.

சிங்களம், தமிழ், முஸ்லிம் உள்ளிட்ட அனைத்து இனங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கூட்டணியாக இது உதயமாக உள்ளது.

அதுபோன்று நாட்டின் ஒற்றுமை, சகோதரத்துவம், நீதி மற்றும் ஜனநாயகத்தைக் கட்டியெழுப்பும் கூட்டணியாக இது இருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

## தேர்தலுக்கு...

வருவதாகத் தேசிய மக்கள் சக்தியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான அநுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம் பெற்ற ஊடக சந்திப்பில் வைத்து அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

பலம்மிக்கதொரு அணியாக இந்த முறை தேர்தலில் போட்டியிடவுள்ளோம்.

எனினும் ஏனைய கட்சிகளின் உறுப்பினர்கள் கட்சிகளுக்கிடையே மாறி மாறித் தேர்தலில் போட்டியிடவுள்ளனர்.

கட்சிகளுக்கிடையே உறுப்பினர்கள் மாறி மாறிச் செல்லும் அரசியல் கலாசாரம் மாற்றப்பட வேண்டும்.

அதேநேரம், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தேர்தல் செயற்பாடுகளுக்காக அரச நிதியைப் பயன்படுத்துகின்றார்.

வாக்காளர்களைக் [illegible] (ம-7)

# மன்னார் கடற்பரப்பில் பீடி இலைகளுடன் மூவர் கைது

இலங்கை எல்லைக் கடற்பரப்பான மன்னார் தெற்கே, வடமேற்கு கடற்பகுதியின் குதிரைமலை முனையில் இலங்கைக் கடற்படையினரினால் நேற்று முன்தினம் இரவு முன்னெடுக்கப்பட்ட விசேட சுற்றிவளைப்பின் போது மூன்று இந்தியப் பிரஜைகள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது கைது செய்யப்பட்ட கடற்றொழிலாளர்களின் படகில் 80 உறைகளில் சுமார் 2689 கிலோகிராம் பீடி இலைகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இவ்வாறு கைது செய்யப்பட்ட இந்திய கடற்றொழிலாளர்கள் மூவரும் பீடி இலைகள் மற்றும் படகு ஆகியவற்றை கற்பிட்டி விஜய கடற்படையினரிடம் ஒப்படைக்கப்பட்டு பின்னர் வடமேல் மாகாண மதுவரித் திணைக்களத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

இதன்போது கைது செய்யப்பட்ட இந்தியப் பிரஜைகள் மூவரையும் நேற்று புத்தளம் நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்தனர்.

இந்நிலையில் இந்த வருடம் இது வரையிலும் 37, 619 கிலோகிராம் பீடி இலைகள் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் 32 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் இலங்கைக் கடற்படையினர் தெரிவித்தனர். (ம-7)

வழங்கும் செயற்பாடுகளும் இடம் பெறுவதாகத் தேசிய மக்கள் சக்தியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான அநுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார். (ம-7)

## நல்லைக்...

வெளியிடப்படும் நல்லைக்குமரன் மலர் - 32இன் வெளியீட்டு விழாவும் யாழ் விருது வழங்கும் நிகழ்வும் நாளை 15ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணிக்கு நல்லை ஆதீன மண்டபத்தில் இடம்பெறும்.

யாழ்.மாநகர சபை ஆணையாளரும் சைவ சமய விவகாரக் குழுவின் தலைவருமாகிய ச.கிருஷ்ணேந்திரன் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில், பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக் கழகத் துணைவேந்தர் சி.சிறிசற்குணராஜாவும் சிறப்பு விருந்தினராக யாழ்.மாவட்ட ஓய்வுநிலை அரச அதிபர் அ.சிவபாலசுந்தரனும் கலந்து கொள்வர்.

நிகழ்வில் நல்லை ஆதீன முதல்வர், வீணாகான குரு பீடாதிபதி சிவஸ்ரீ சபா.வாசுதேவக் குருக்கள், கலாநிதி ஆறு.திருமுருகன் ஆகியோர் ஆசியுரைகளை வழங்குவர்.

இந்நிகழ்வில் யாழ்.போதனா வைத்தியசாலை மகப்பேற்று நிபுணர் மருத்துவர் ந.சரவணபவா அவர்களுக்கு யாழ் விருது வழங்கிக் கௌரவிக்கும் நிகழ்வு இடம்பெறும். (ம-7)

### மஹஜன சம்பத

திகதி 2024.08.13 — சீட்டிழுப்பு இலக்கம் 5564

K 6 7 4 4 6 9

அத சம்பத — K 4 4 6 9 — சீட்டிழுப்பு இலக்கம் 139

### தன நிதானய

திகதி - 2024.08.13 — சீட்டிழுப்பு இலக்கம் - 1594

K 02 10 47 55 K — Double Chance 42036

### மெகா பவர்

திகதி 13/08/2024 — சீட்டிழுப்பு இலக்கம் 1912

E 13 01 17 36 80 — 05158

### லக்கி 7 VIP

திகதி 2024.08.13 — சீட்டிழுப்பு இலக்கம் 0390

H 3 7 2 2 6 1 H

### கொவிசெத

சீட்டிழுப்பு இலக்கம் 3806 — சீட்டிழுப்பு திகதி 13.08.2024

N 18 29 74 76 — N — 41354

### HANDAHANA

உத்தியோகபூர்வ முடிவுகள் — சீட்டிழுப்பு திகதி 2024.08.13 — சீட்டிழுப்பு இலக்கம் 0873

தனுசு 19 26 29 60 தனுசு — 16271 — 01

### உத்தியோகபூர்வ முடிவுகள் — சுப்பர் மில்லியன்

13.08.2024 — வெற்றி வாரம் 272 — வர்ணம் சிவப்பு

U 5 7 4 4 7 4 — 74350 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.20,000,000.00

### SUPER BALL

சீட்டிழுப்பு வாரம் 2538 — வர்ணம் வெளிர் நீலம் — சீட்டிழுப்பு திகதி 13.08.2024 — தினம் செவ்வாய்

01 31 37 63 M — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 51,739,737.60

### சனிதா

திகதி 2024.08.13 — வெற்றி வாரம் 4699

22 41 50 65 A — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.68,371,193.20 — 93436

### சசிரி

515 — 2024.08.13

12 16 32 — 07 — வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,756,880/-

### ராசி

சீட்டிழுப்பு வாரம் 4250 — வர்ணம் சிவப்பு — சீட்டிழுப்பு திகதி 2024.08.13 — தினம் செவ்வாய்க்கிழமை

12 18 29 51 சிம்மம் — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.4,936,371.60 — 135005

### கப்ருக

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்

Q 24 13 46 60 73 — 1714 — 13.08.2024 செவ்வாய் — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 538,817,974.20

### அத கோடிபதி

செவ்வாய்க்கிழமை — வெற்றி வாரம் : 2364 — 2024.08.13 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ 58,465,840.80

03 43 49 65 G — 264911

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**புதிய பிரிவுகள் ஆரம்பம்**

தொழிற்துறைக் கணக்காளர் ஆவதற்கு

**aat (Sri Lanka)**
(AA1 - 17.08.2024),
(AA 2, AA 3 - 24.08.2024)

G.C.E O/L பெறுபேற்றினை எதிர்பார்த்திருப்பவர்களும் கற்கலாம்.

கணக்காளர் கற்கை நெறிகள்
**Chartered Accounting Courses**
Business Level - I,II (17.08.2024)

வங்கியியல் கற்கை நெறிகள்
**Banking Courses**
**DBF & HDBF (14.09.2024)**

**Certificate Course in English**

Further Details : **Jaffna College**
Undergraduate Dept.
464, Hospital Road, Jaffna.
021 222 3382/ 021 222 9149
- 077 440 5917
(C-974)

**இந்தியன் விசா சேவைகள்**

யாழ்ப்பாணம் - சென்னை
விமானப் பயணச் சீட்டுக்கள்

அனைத்து நாடுகளுக்குமான விமானப் பயண சீட்டுக்களினை எம்மிடம் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

**APEX TRAVELS**
0777 597 598, 076 3333 644
இல.105/1, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம். (248)

**விசாக்கான (Show money)**

வங்கி இருப்பு உறுதிப்படுத்தி தரப்படும்.

**1%**
- Visit visa
- Student visa
- Fixed & saving
- லட்சத்திற்கு 1000 மட்டுமே

சகல நாடுகளுக்குமான விசா சேவைகள்
தொடர்புகளுக்கு:
**075 033 6759**
(216)


# மாணவி வன்புணர்வு
# அதிபர், ஆசிரியர்கள் உட்பட நால்வர் கைது

(கொழும்பு)

மொனராகலை தனமல்விலப் பிரதேச பாடசாலையொன்றில் கல்வி பயின்ற பாடசாலை மாணவியை வன்புணர்வுக்கு உட்படுத்திய சம்பவம் தொடர்பில் தகவல்களை அறிந்து பொலிஸாருக்குத் தகவல் தெரிவிக்காமல் மறைத்த பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் உட்பட நான்கு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தனமல்விலப் பகுதியில் 16 வயதான சிறுமி ஒருவர் 17 பாடசாலை மாணவர்களினால் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்ட சம்பவம் தொடர்பில் பொலிஸார் விரிவான விசாரணைகளை ஆரம்பித்திருந்தனர்.

இந்நிலையில், பாடசாலையின் அதிபர் மற்றும் ஒழுக்காற்றுக் குழுவினர், சம்பந்தப்பட்ட மாணவர்களையும் மாணவியையும் அழைத்து வந்து உண்மைகளை விசாரித்து, பாடசாலைக்கு களங்கம் விளைவிக்காத வகையில் சம்பவத்தை மூடி மறைத்துள்ளமை விசாரணையில் தெரியவந்துள்ளது.

சந்தேகநபர்களில் தனமல்வில பிரதேசத்தைச் சேர்ந்த ஆசிரிய ஆலோசகர் ஒருவரின் மகனும் அடங்குவதாகவும், மாணவியின் தாயார் பாடசாலை ஆசிரியை என்பதும் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இதனை தொடர்ந்து, சந்தேகத்திற்குரிய 17 மாணவர்களில் 14 பேரை சிறுவர் சீர்திருத்தப் பள்ளிக்கு அனுப்ப சிறைச்சாலை அதிகாரிகளுக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)


**வேலைவாய்ப்பு**

உரும்பிராயில் அமைந்துள்ள சுப்பர்மாக்கட் ஒன்றிற்கு கீழ்வரும் பணியாளர்கள் தேவை.

- Full time Cashier - பெண்
- கூலி - ஆண்
- Part time Cashier - ஆண்
- Accounts/ office assistant - பெண் (A/L Com/Maths/ Bio)

யாழ் மாநகர எல்லைக்குள் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது.
சுயவிபரக்கோவையுடன் நேரில் வந்து சந்திக்கவும்.

திகதி : 14.08.2024(புதன்கிழமை)
நேரம் : 11 am - 5pm வரை சந்திக்கவும்

**Happy Supermarket**
உரும்பிராய் 077 773 0900
(247)

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

**ஆகாஸ் நகை மாடம்**

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-978)

**076 825 7716** (ஆகாஸ்)

**V2 VISA SERVICES**
**கனடா**
077 77 20 322
077 77 19 322
Visit Visas
Air Tickets
- கனடா PASSPORT APPOINMENTS

**விமான பயணச்சீட்டுக்கள்**
- Student Visas
- Online Appointments
- இந்தியா Visas
- Online Visas - All countries
- Police Clearance
- Travel Insurance

**Sri lankan Visa Extention**
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு
(C-0977)

**Care Giver - பராமரிப்பாளர்**

கனடா, அமெரிக்கா, ஜேர்மனி
போன்ற நாடுகளில் வேலை வாய்ப்பினை பெறக்கூடிய கற்கை நெறி - 1 Year Diploma

கனடாவில் புதிதாக உள்வாங்கப்படவுள்ள நிரந்தரகுடியுரிமையுடனான 15'000 Care Giver வாய்ப்புக்களுக்கான சர்வதேச தரமிக்க Diploma சான்றிதழுடன் Care Giver கற்கை நெறி மற்றும் Immigration Services - விசா சேவைகள்.
(இரு பாலாரும் விண்ணப்பிக்கலாம்)

**CIMS College**
49A, Chapel Street,Jaffna.
(C-0977)
College Of International Migration Skills
0777 068 777 / 077 7719 322

**தேவை**

கிளிநொச்சியில் இயங்கும் பிரபல ஹார்ட்வெயர் நிறுவனத்துக்கு வேலையாட்கள் தேவை.

- விற்பனையாளர்
- Welding வேலை தெரிந்தவர்

தொடர்புகளுக்கு:
**021 228 3663, 076 000 4903**
(C-975)

முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பு

# அருள்மிகு ஸ்ரீ கந்தசுவாமி கோவில்
# நூதன பிரம்மாண்ட
# சப்பைரத வெள்ளோட்டம் - 15.08.2024



**முருகப்பெருமான் பக்த அடியார்களே!**

எமது ஆலயத்தில் நூதனமாக பிரம்மாண்ட
சிற்ப வேலைப்பாடுகளுடன் அமைக்கப்பட்ட
47 அடி உயரமுடைய புதிய சப்பைரத வெள்ளோட்டம்
நிகழும் மங்கலகரமான குரோதி வருடம்
ஆடி மாதம் 30ம் நாள் 15.08.2024 வியாழக்கிழமை
நண்பகல் 12.15 - 01.15 மணி வரையான
சுபமுகூர்த்த சுபவேளையில்
**சப்பை ரத வெள்ளோட்டம்**
சிறப்பான முறையில் இடம்பெறும்.



அத்தருணம் முருகப்பெருமான் அடியார்கள் அனைவரும் வருகை தந்து
சப்பைரத வெள்ளோட்டப் பெருவிழாவை கண்டு களிப்புற்று
எம்பெருமானின் அருளைப் பெற்றுய்யுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

2024.08.17 ஆம் திகதி 8ம் திருவிழா அன்று முருகப்பெருமான் புதிய சப்பை ரதத்தில் இரவு 9 மணிக்கு எழுந்தருளி அடியவர்களுக்கு அருள் பாலிக்கும் அரும்பெரும் காட்சியும் இடம்பெறும்.

" அனைவரும் வருக !
ஆறுமுகனின் அருளைப் பெறுக! "

8ம் திருவிழா ( சப்பறத்திருவிழா ) உபயகாரர்கள்
அருள்மிகு ஸ்ரீ கந்தசுவாமி கோவில்
புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு.
(C-976)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தால் இல. 131, ... வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 14.08.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.